
# தென்மொழி

## புதுமுரசு இனவொலி எழுப்பட்டும்!



முழங்கி முழங்கி முரசு கிழிந்தது!
மூடரின் நெஞ்சோ முன்பே கிழிந்தது!
வழங்கு சொற்களைச் செவிகள் வாங்கில!
வழிவழி மரபுகள் வரட்சி கொண்டன!
பழங்குட் டைகளில் படிந்த பாசிகள்
பாழும் சாதி, மதங்களாய்ப் படர்ந்தன!
எழுங்கதிர் எழுந்த படியே இருக்குமோ?
எழுந்து பகைவரை எரித்துப் பொசுக்குமோ?

திரவிட முரசொலி தமிழாய் முழங்குக!
தேயாத உணர்வினால் இன நலம் வழங்குக!
கருவிடக் குழந்தைக்கு நாட்டுணர் வூட்டுக!
கருதுதல், பேசுதல், எழுதுதல், செய்தலாம்
வருவுணர் வனைத்திலும் விடுதலை வித்துக!
வாய்த்திடின் புரட்சியைக் குருதியில் மலர்த்துக!
ஒருநிலை வரும்; அதற் கொருநாள் ஒதுக்குக!
உரிமைக் கிளர்ச்சியை மக்களால் ஓச்சுக!

கொட்டும் புதுமுரசு இன்வொலி எழுப்பட்டும்!
கொள்கை முழங்கித் தமிழர(சு) அமைக்கட்டும்!
முட்டும் பகையினை மோதி முறித்து,இம்
முத்தமிழ்ப் பேரினம் முழுஉரி மைபெற்றே,
எட்டும் கொடுமுடி தமிழினம் எய்தட்டும்!
ஏற்றமும் மாற்றமும் புத்துயிர்ப் பாகட்டும்!
நெட்டும் குறுக்குமாய் உலகில் பரவிய
நேற்றைய தமிழினம் இனிஒன்று சேர்கவே!


சுவடி : 24
ஓலை : 9

ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்

விலை
உருபா:2-00


Scanned with CamScanner

# நமக்கு வந்த மடல்கள்.

○: 1315: அருந்தமிழ் அடலேறும் பாவலரேறு அவர்கட்கு! வணக்கம். தென்மொழியின் சுவடி 24 ஓலை 8-இல் தங்களின் ''வீடுபேறு'' கண்டேன். கண்டதும் 'பேசுவதால் பயன் இல்லை; அவரவர் பட்டறிவால் (அனுபவத்தால்) எய்துவதே ஞானம்' என்ற பாரதியின் பாடல் தொடர்ப்பொருளைத் தங்கள் வீடுபேற்றோடு பொருத்திப் பார்த்தேன். நெஞ்சம் நெகிழ்ந்தது. பைந்தமிழ் நாட்டுப் பழந்தமிழ்ப் புலவர்களின் வாழ்வியல் அடிச்சுவடுகள் வழி வழி வாழ்கின்றன என்பதற்கு அடையாளமே கழகப் புலவர்களின் செம்மாப்புடன் வறுமையிற் செம்மையாய் வாழும் தங்கள் வாழ்வியல் தடங்கள் என நினைந்தேன். இக்காலம் அருளியல் சாய்ந்த பொருளியல் காலம். எனவே, ''இன்னா தம்ம இவ்வுலகம்; இனிய காண்கித னியல்புணர்ந் தோரே!'' என்று புறநானூறு காட்டும் பழந்தமிழ் உணர்வே தங்களின் ஆற்றாமை ஆற்றுவதொன்றினைப் பற்றுதற்குரிய தாகுக! வெல்க தங்கள் வீறுதமிழ் உணர்வு!

அன்பன்,

— தெ. முருகுசாமி, காரைக்குடி-1.

○: 1316: பெருந்தகை அய்யா அவர்களுக்கு! வணக்கம். எங்களின் அன்பான அழைப்பினைப் பல்வேறு இன்னல்களுக்கு இடையிலே ஏற்றுக் கொண்டு 11-11-88-இல் நடைபெற்ற என் மகள் மீராவின் மணவிழாவிற்குத் தவறாமல், குறிப்பிட்ட காலத்திற்கு முன்னரே வருகை தந்து, மணவிழா மாண்புறும் வண்ணம் நிறைமொழிகளால் சிறப்புற நிகழ்வித்த தங்களின் மறத்தற்கரிய உதவிக்கு எங்களின் நெஞ்சார்ந்த நன்றியினை உரித்தாக்குகின்றேன்.

மடல் வாயிலான தொடர்புக்கு உட்பட்டு உறுதியளித்தவாறு வருகை தந்த வியப்பிற்குரிய ஒருவரை எங்கள் வாழ்நாளில் முதன் முதலில் சந்தித்தது தாங்கள் ஒருவராகத்தாம் இருக்க இயலும். தங்களின் நேரிய பண்பாட்டிற்கும், வளம் குன்றா மொழிப்பற்றிற்கும், தடம் மாறாத தனித்தமிழ் நடைக்கும், மாற்றமிலா இனப் பற்றிற்கும் என்றென்றும் கடமை பட்டுள்ளோம்.

என் இளவலின் உடல் நலம் தாக்கப்பட்ட நிலையில் தஞ்சை மருத்துவமனையிலிருந்து இந்த நன்றி மடலைக் காலம் தாழ்த்தி எழுத நேரிட்டமைக்கு வருந்துகின்றேன். பொறுத்தருள்க. நன்றி.

இவண், என்றென்றும் தங்கள் நலம்நாடும்

பொ. வேங்கடாசலம், திட்டக்குடி.

○: 1317: அன்பார்ந்த ஐயா, வணக்கம். பல தொல்லையான சூழ்நிலைக்கிடையே 'தென்மொழி'யை வெளியிட்டு வரும் தங்களின் நன்முயற்சியைப் பாராட்டுகிறேன். அண்மையில் ஏற்பட்ட தாக்கங்கள் தங்களின் நெஞ்சத்தைச் சிதைக்காமல் கவனித்துக் கொள்வீர்கள் எனும் நம்பிக்கை உண்டு.

இன்றும் தனித் தமிழுக்கு வழிகாட்டியாகவும் முன்னோடியாகவும் வந்து கொண்டிருக்கும் 'தென்மொழி'யை முன்னைப்பொலிவுடன் நடத்துமாறு பல முறை கேட்டு மடல் எழுதியுள்ளேன்.

(தொடர்ச்சி அட்டை 3-ஆம் பக்கம்)

Scanned with CamScanner

(இம்மாதம் இதுதான் ஆசிரியவுரை)

# தொலைக்காட்சித் தொடர் — 'ஏழு தலைமுறை எழுச்சி'க்கு எதிர்ப்புத் தெரிவியுங்கள்!

('ஏழுதலைமுறை எழுச்சி' என்னும் பெயரால், சென்னைத் தொலைக் காட்சி ஒளிபரப்பும் ஒரு தொடர், பார்ப்பனரல்லாத இயக்கத் தலைவர்களைக் கொச்சைப்படுத்தி, வரலாற்றையும் திரித்துக் கொண்டிருக்கிறது. இதை எதிர்த்து, திராவிடர் கழகப் பொதுச் செயலாளர் திரு. கி. வீரமணி அவர்கள் சென்னை, உயர்நெறி மன்றத்தில் முறையீடு செய்த வழக்கு உரையை இங்கு வெளியிடுகிறோம். தொலைக் காட்சி நிலையத்தின் பார்ப்பன வல்லாண்மைப் போக்குகளை அம்பலப்படுத்தும் பல்வேறு செய்தி-கள் இதில் அடங்கியிருக்கின்றன. இம் முறையுரை 15-12-88 'உண்மை' இதழில் வெளியிடப் பெற்றது.

தென்மொழி, தமிழ்நிலம் அன்பர்கள் இக் கட்டுரைக் கருத்-தைக் கவனமாகப் படித்து, மனத்தில் இருத்திக் கொள்வதுடன், சென்னைத் தொலைக்காட்சி நிலைய இயக்குநர்க்கு, இத்தொடரை உடனே நிறுத்திக் கொள்ளும்படியும், அத்தொடரைக் கடுமை-யாகக் கண்டித்தும் ஒரு மடல் எழுதி, அதில் அன்பர்கள் பலரும் கூட்டாகக் கையெழுத்திட்டு, அனுப்பிவிட்டு, அதன் ஒரு படி-யைத் தென்மொழிக்கும் அனுப்பி வைக்கக் கேட்டுக் கொள்-கிறோம். (முறையுரை தூய தமிழ்ப் படுத்தப் பெறுகிறது.) — ஆசிரியர்.)

1976-ஆம் ஆண்டு தொடங்கப் பெற்ற, சென்னைத் தொலைக் காட்சி நிலையத்தில், பணியாற்றுவதற்கு ஊழியர்கள், உருவாக்கு நர்கள் (தயாரிப்பாளர்கள்) முதலியோர், அரசின் பணியமர்த்தக் குழு (Service Commissicn) மூலமோ, வேலை வாய்ப்பு அலுவல-கம் மூலமோ, செய்தித்தாள்களில் விளம்பரம் செய்தோ, இவை போன்ற முறையான வழிகளிலோ தேர்வு செய்யாமல், செய்தித் தொடர்புத்துறைச் செயலாளரின் விருப்பு வெறுப்புக் கேற்ப, தேர்வு செய்யப் பெற்றனர்.

இதில் பெரும்பதவிகளில் இருப்பவர்களில் பெரும்பாலோர் பார்ப்பனர்கள். எனவேதான் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்ப்பன வகுப்பு உணர்வுகள் எதிரொலிக்கின்றன. தொலைக் காட்சியில் வாய்ப்பளிக்கப்படும் கலைஞர்களிலும் பார்ப்பனர்களே அதிகம். அவர்கள் பார்ப்பனீயத்தையே கருத்துப் பரப்புதல் செய்கிறார்கள். தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில் பார்ப்பனர்களின் கருநாடக இசையும், பரதநாட்டியமுமே அதிக நேரத்தை அடைத்துக் கொள்கின்றன. (இவ்விடத்தில் ஒரு விளக்கம்: கருநாடக இசையும், பரத நாட்டியமும் தூய தமிழ்க்கலைகள் என்றாலும், அதைத் தெரிந்தவர்களில் தமிழர்களும் இருக்கின்-றனர் என்றாலும், அவ்விரு கலைகளும் ஆரிய மயமாக்கப்பட்டிருப் பதுடன், அவ்விரண்டிலும் பார்ப்பனர்களுக்கே வாய்ப்புகள்

கொடுக்கப்படுவது, பார்ப்பனீயத்தை வளர்த்தெடுக்கவும், அத னுல் அவர்களே பிழைப்பெய்துவதற்குமே ஆகும். — ஆசிரியர்)

அறிவியல் நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான நேரங்கள், வினுடி வினு நிகழ்ச்சிகள் ஆகியவற்றுக்கான நேரங்கள், பெருமளவு குறைக்கப்பட்டு விட்டன. பார்ப்பன இனத்தைச் சார்ந்த அகிலா சிவராமன் இயக்குநராக வந்த பிறகு, கருநாடக இசை, பரத நாட்டியத்துக்கான நேரம் அதிகமாக ஒதுக்கப்பட்டது. இந்த அம்மையாரின் சொந்த உடன்பிறந்தவர் குருசாமி என்பவர், இந்த நிலையத்தின் துணை இயக்குநர் என்பதும் குறிப்பிடத் தக்கது.

கலை, பண்பாட்டு நிகழ்ச்சிகளேக் காட்டுவதற்கான 'உலா-வரும் ஒளிக்கதிர்' நிகழ்ச்சியில், கோயில் விழாக்களே மட்டுமே பார்ப்பனப் புரோகிதத்துக்கும் வேதங்களுக்கும் முகாமை தந்து காட்டப்படுகிறது. மதச்சார்பற்ற நாட்டில் இத்தகைய மதப் பரப்புதல் தொலைக்காட்சியில் நடத்தப்படுவது சட்டப் புறம்-பானதாகும்.

பார்ப்பனர்களின் தனிப்பட்ட விழாக்களான 'பால்முழுக் காட்டு' (பாலாபிஷேகம்), மங்கள பூசை ஆகியவையும் ஒளிபரப் பப்பட்டு, அதற்காகத் தொலைக்காட்சி நிகழ்ச்சி ஏற்பாட்டாளர் களுக்குப் பணமும் தரப்படுகிறது. இத்தகைய பார்ப்பனீய நிகழ்ச்சிகளே நடத்தும் குழுவுக்கு உரு. 10,000 மும், அதே நேரத் தில் சிற்றூர்ப்புற(கிராமிய)க் கலை நிகழ்ச்சிகளே நடத்துவோருக் குத் தலைக்கு உரு 50 மேனியும் பணம் தரப்படுகிறது. இப்படிப் பணம் தருவதில் கூட வசதி படைத்த பார்ப்பனர்களுக்கு அதிகத் தொகையும், சிற்றூர்ப்புற ஏழைக்கலைஞர்களுக்குக் குறைந்த தொகையும் வழங்கப்படுகிறது.

பார்ப்பனரின் வல்லாண்மை உணர்வையும், தன்முனைப்-பையும் நிறைவு செய்வதற்காக, சில நூறு பேர்கள் மட்டுமே பேசக் கூடிய சமசுக்கிருத நிகழ்ச்சியை 30 நிமையம் ஒளி பரப்பு-கிறுர்கள். சமசுக்கிருதம் ஒரு செத்த மொழி.

தில்லிப் பார்ப்பன வல்லாண்மை!: தொலைக்காட்சி நிலையத்தின் இந்தப் பார்ப்பனப் போக்கு, தில்லிப் பார்ப்பன வல்லாண்மை-யின் எதிரொலிப்பே ஆகும். குடியரசுத் தலைவர், குடியரசுத் துணைத் தலைவர், மீமிசை மன்றத் தலைமை நடுவர், நடுவண் அரசு அமைச்சர்கள், உயர் அரசுச் செயலாளர்கள் மற்றும் நடுவண் அரசின் தன்னுட்சி அமைப்புகளின் தலைவர்கள் எல்லா-ருமே பார்ப்பனர்கள். 2 விழுக்காடு மக்கள் தொகை கொண்ட பார்ப்பனர்கள் இப்படி எல்லாத் துறைகளிலும் வல்லாளுமை செலுத்துவதால், தொலைக்காட்சியிலும் அந்நிலை எதிரொலிக்-கிறது.

விளம்பரக்காரர்கள் நிகழ்ச்சி: கடந்த 2 ஆண்டுகளில் ஒளி பரப்-பப்பட்ட 36 விளம்பரக்காரர் நிகழ்ச்சிகளில், 7 நிகழ்ச்சிகள் மட்-டுமே பார்ப்பனரல்லாதாருக்கு அளிக்கப் பட்டிருக்கின்றன.

Scanned with CamScanner

3-ஆவது எதிர்க்கட்சிக்காரரான கிருட்டிணசாமி உருவாக்கியுள்ள 'ஏழு தலைமுறை எழுச்சி' என்னும் தொடர் நிகழ்ச்சி இப்போது ஒளிபரப்பாகி வருகிறது. இந்த நிகழ்ச்சி உருவாக்குநர், மறைந்த திரைப்பட இயக்குநர் கே. சுப்பிரமணியத்தின் மகன். கே. சுப்பிரமணியம் மறைந்த தமிழக முதலமைச்சர் எம். சி. ஆருக்கு மிக நெருக்கமானவர். மேலிடத்தில் உள்ளவர்களிடம் தமக்குள்ள சாய்காலைத் தமது சொந்த நலனுக்காகப் பயன்படுத்திக் கொள்வது இயக்குநர் சுப்பிரமணியத்தின் வழக்கம், அதன் காரணமாகத்தான் நெருக்கடி நிலைக் காலத்தில் சுப்பிரமணியத்தின் மகன் கிருட்டிணசாமி 'சிந்து வெளியிலிருந்து இந்திராகாந்தி வரை' என்ற திரைப்படத்தை உருவாக்கினார். மக்கள் இனத்தின் நாகரிகத்தை ஒரு தனி மாந்தரோடு சமமாகக் கருதி அந்தப் படத்தை உருவாக்கினார்கள்.

இப்போது ஒளிபரப்பாகும் 'ஏழு தலைமுறை எழுச்சி' என்னும் தொடர் 13 பாகங்களைக் கொண்டது. குமுகாய முன்னேற்றத்துக்கு முகாமையாக உழைத்தவர்கள் பார்ப்பனர்கள் தாம் என்றும், இந்திய நாட்டுரிமைப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும் அவர்கள் மட்டுமேதாம் என்றும் இந்தத் தொடரில் விளக்கப்படுகிறது. தன்மான (சுயமரியாதை) இயக்கமும், பார்ப்பனரல்லாத மக்களும் ஆற்றிய சீரிய தொண்டுகளை இருட்டடிப்புச் செய்து, அவர்களைக் கொச்சைப் படுத்திக் காட்டுகிறார்கள்.

எடுத்துக்காட்டாக, 6-ஆவது தொடரில், திருவாவடுதுறை ஆதீனம் — பாரதியாரைப் பாராட்ட அழைத்தபோது, அதற்குப் பாரதியார் வரமறுத்து விட்டார் என்று காட்டினார்கள். திருவாவடுதுறை ஆதீனம் பார்ப்பனர் அல்லாதவர். ஒரு பார்ப்பனரல்லாத ஆதினம் தரும் பாராட்டைத் தம்மால் ஏற்க முடியாது என்று பாரதியார் மறுத்து விட்டதாகக் கூறி, பாரதியாருக்குப் பார்ப்பன உணர்வு இருந்தது என்பது போல் காட்டிப் பாரதியாரைச் சாதி உணர்வு உள்ளவராக உருவகித்துக் காட்டினார்கள். இதே போல் சங்கராச்சாரியார், யாரையாவது பாரட்ட அழைத்துப் பிறகு வர மறுத்துவிட்டதாகக் காட்டுவார்களா?

5-12-88 அன்று ஒளிபரப்பான தொடரில், வைக்கத்தில் நடந்த போராட்டம் — தாழ்த்தப்பட்டோர் கோயில் நுழைவு உரிமைக்கான போராட்டம் என்று கூறப்பட்டது. இ'து உண்மையன்று. வைக்கத்தில் நடந்த போராட்டம் — தாழ்த்தப்பட்டோர், கோயிலைச் சுற்றியுள்ள வீதிகளில் நடக்கக் கூடாது என்று பார்ப்பனர்கள் தடைசெய்ததை எதிர்த்துத்தான் நடந்தது. ஈழவக் குமுகாயத்தைச் சார்ந்த வழக்கறிஞர் ஒருவர் திருவனந்தபுரத்தில் அரசர் அரண்மனைக்கு அருகே இருக்கும் அறமன்றத்துக்கு — அரண்மனையைச் சுற்றியுள்ள வீதிகளின் வழியாகச் சென்றபோது, பார்ப்பனர்கள் அவரைத் தடுக்கவே போராட்டம் தொடங்கியது. அதற்குப் பிறகு வீதிகளில் ஒடுக்கப்பட்டோர் நடப்பதற்கு உரிமை வேண்டும் என்று போராட்டம் நடத்த தீர்-

மானிக்கப்பட்டு, அந்தப் போராட்டத்தை நடத்த வைக்கம் தேர்வு செய்யப்பட்டது என்பதே உண்மை வரலாறு.

இனி, இதே தொடரில் மருத்துவர் முத்துலட்சுமி (ரெட்டி.) ஒரு பார்ப்பனர் என்று காட்டப்பட்டது. இ'து உண்மையன்று. மருத்துவர் 30-7-1896-இல் புதுக்கோட்டையில் பிறந்தவர். அவர் இசை வேளாளர் குமுகத்தைச் சார்ந்தவர். அவர் தேவதாசி ஒழிப்புச் சட்ட வரைவை (மசோதாவை) மேலவையில் கொண்டு வந்தபோது, பேராயக்கட்சி உறுப்பினர்களும், சத்தியமூர்த்தியும் எதிர்த்தனர். இவற்றையெல்லாம் இந்தத் தொடரில் மறைத்து விட்டுத் தேவதாசி ஒழிப்புச் சட்ட வரைவையே ஒரு பார்ப்பனர் கொண்டு வந்தது போலவும் முதன் முதலாக மருத்துவர் பட்டம் பெற்ற பெண்ணை முத்துலட்சுமி ரெட்டி ஒரு பார்ப்பனர் என்றும், வரலாற்றைப் புரட்டிக் காட்டினார்கள். இந்தத் தொடருக்காகத் தொலைக் காட்சி நெறிமுறைகள் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன என்பதை, உருவாக்குநரே 'கல்கி' இதழுக்கு (11-12-88) அளித்த நேருரையில் குறிப்பிட்டிருக்கிறார். இந்த நிகழ்ச்சியைச் சரிபார்த்து ஒப்புதல் வழங்கும் ம. பொ. சி. திராவிட இயக்க எதிர்ப்பாளர். திராவிட இயக்க எதிர்ப்பு மாநாடு நடத்தியவர். இதற்கு உரையாடல் எழுதும் செயகாந்தன், பேராயக் கட்சி நடத்தும் நாளேட்டின் ஆசிரியர். அவர் இதைப் பேராயக் கட்சியின் கருத்துப் பரப்புதலுக்குத்தான் பயன்படுத்திக் கொள்வார். எனவே இதில் ஒளிபரப்பாகும் கருத்துகள் அரசின் அதிகார முழுமையான கருத்துகள் அல்ல. ஆனும் பேராயக் கட்சியினரும், பார்ப்பனர்களும் சேர்ந்து, தங்களின் கருத்துப் பரப்புதலுக்காக வரலாற்றைத் திரிபு செய்து, ஒருதலைப் பக்கமான கருத்துகளைப் பரப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

வரலாற்றுப் புரட்டு: சாதிப் பிளவுகள் — இந்துக் கோட்பாடுகளில் கிடையா என்றும், அவை பிரிட்டிசுக்காரர்கள் ஏற்படுத்தியன என்றும், இந்த நிகழ்ச்சி உருவாக்குநர் வரலாற்றையே மாற்றிப் புதிய வரலாற்றையே எழுதுகிறார்.

ஆரியர்கள்தாம் இந்த நாட்டின் பழங்குடிகள் என்று கூறி, ஆர். எசு. எசு. கொள்கையை இந்தத் தொடர் உருவாக்குநர் ஒத்தொலிக்கிறார்.

சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தின் ஆய்வுக்குழு — இத்தொடரில் வரலாறுகள் திரிக்கப்பட்டுள்ளனவாகக் கூறித் திருப்பி அனுப்பிய நிலையில், பட உருவாக்குநர் ஒரு பார்ப்பனராக இருப்பதால், பார்ப்பனச் சாய்காலைப் பயன்படுத்தி ஒப்புதல் பெற்றுவிட்டார் என்று தெரிகிறது. 2-ஆவது எதிர்வழக்காடியான நடுவண் செய்தி தொடர்புத் துறைச் செயலாளரும் ஒரு பார்ப்பனராக இருப்பதால், இதற்கு ஒப்புதல் தந்து விட்டார்.

இந்த நிலையில் — ஒரு குறிப்பிட்ட கருத்தை ஒளிபரப்ப வாய்ப்புத் தரும்போது, அதற்கு மாறுபட்ட கருத்தையும்,

Scanned with CamScanner

தொலைக் காட்சியில் கூறுவதற்கு வாய்ப்புத் தரவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பார்ப்பனரல்லாதார் இயக்கத்தையும், அதன் தலைவர்களையும், இதன் உருவாக்குநர் மனம்போன போக்கில் கொச்சைப் படுத்துவதை எங்களால் பொறுத்துக் கொள்ள முடியாது. ஒடுக்கப்பட்ட மக்களின் உயர்வுக்காக உழைக்கும் குமுகாய இயக்கத்தைச் சார்ந்தவர்கள் என்ற முறையில், வரலாற்றைத் திரிக்கும் இந்தப் பகடி (கேலி)த் தனத்தைப் பொறுத்துக் கொள்ள முடியாது என்று தெரிவித்துக் கொள்கிறேன். எனவே, 1) உரிமைப் போராட்டம், 2) ஆரிய, திராவிடக் கலைப் பண்பாடுகள், 3) பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆகியவை தொடர்பாக எங்கள் கருத்துகளையும் தொலைக் காட்சியில் எடுத்துக் கூற இசைவளிக்க வேண்டும்.

நடுவிலும் மாநிலத்திலும் தேர்தலைச் சந்திக்க இருக்கும் பேராயக் கட்சியினர், திராவிடக் கட்சிகளை வெளிப்படையாகத் தாக்கிக் கருத்துப் பரப்புதல் செய்யும் இந்த நிகழ்ச்சிகளை அனுமதிப்பதன் மூலம், பார்ப்பனத் தன்னல ஆற்றல்களின் வலையில் விழுந்து விட்டதை உணரவில்லை.

நெறிமுறைகளை எல்லாம் மீறி, இந்தத் தொடர் ஒளிபரப்ப அனுமதிக்கப்பட்டுள்ளதோடு, பல இலக்க உருபாவும் இதற்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறது. 2-ஆவது எதிரியும், 3-ஆவது எதிரியும் இந்த முறைகேடுகளைச் செய்திருக்கிறார்கள்.

அதோடு இதை ஒளிபரப்புவதற்கான ஒப்புதல் சான்றிதழையும் தணிக்கைக் குழுவிடமிருந்து பெறவில்லை. இது திரைப்பட ஒளிபரப்பு நெறிகளுக்கு எதிரானதாகும்.

அதோடு, இந்தத் தொடர் பல்வேறு வகுப்பினருக்கிடையே பகைமைக்கும் வெறுப்புக்கும் வித்தூன்றுவதால், சட்டம், ஒழுங்குச் சிக்கல்கள் எழும் நிலையை உருவாக்குகிறது.

எனவே, இந்த முறையீடு மீதான உசாவல் முடியும் வரை, இந்தத் தொடரை ஒளிபரப்பத் தடை செய்ய வேண்டும். அல்லது முறையீட்டாளராகிய எனக்கு, உரிமைப் போராட்டம், ஆரிய, திராவிடக் கலைப் பண்பாடு, பார்ப்பனரல்லாதார் இயக்கம் ஆகியவற்றைப் பற்றிய தொடர் ஒன்றை உருவாக்கி ஒளிபரப்ப அனுமதி தர வேண்டும். அதுவரை இந்தத் தொடரை ஒளிபரப்ப இடைக்காலத் தடை போட வேண்டும்.

இவ்வாறு கழகப் பொதுச் செயலாளர் தமது வழக்கு முறையீட்டில் குறிப்பிட்டுள்ளார்.

இதழ் ஆசிரியர் பின் குறிப்பு: தி. க. பொதுச் செயலாளர் மானமிகு கி. வீரமணி அவர்களின் இந்த வழக்குத் தொடுப்பு நமக்குப் பெருமகிழ்ச்சி தருவதாகும். ஆனால், இதனால் எல்லாம் எந்தவகையான பயனோ விளைவோ ஏற்படும் என்று பொதுச் செயலாளர் அவர்கள் எதிர்பார்க்க மாட்டார்கள் என்று

நம்புகிறேன். நம்முள் நாம் வேறுபட்டும் மாறுபட்டும் கிடைக்கும் இவ் விழிநிலையைப் பயன்படுத்தியே பார்ப்பனர்கள் தங்கள் நடைமுறையில் மிகு துணிவும் முழு வேகமும் கொண்டிருக்கிறார்கள் என்பது அனைவர்க்கும் தெளிவானது. நம் பணியில் நாம் தொய்வடைவதே எதிரியை இன்னும் தீவிரமாகச் செயல்படச் செய்யும். எனவே, விரைவில் நாம் ஒன்றிணைந்து பார்ப்பனச் செயல் எதிர்ப்புப் போராட்டங்களை மேற்கொள்ளுவோமாக! 0

(அட்டை 4ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஊதியம் பெறுகிறார்கள். யாரும் 1000க்குக் குறைந்து வாங்கவில்லை. நாள்கூலி பெறுபவர்கூட ஒரு நாளைக்கு உருபா 50 என்றால் 30 நாள்களுக்கும் 1500 உருபாக்களைப் பெறுகிறார்கள்.

தென்மொழியில் ஆசிரியருக்கு மடல் எழுதியவர்களின் எண்ணிக்கை இதுவரை 1319. (தென்மொழி சுவடி 24 ஓலை 7-இன் படி). இந்த 1319 பேரும் மனம்வருந்தி உருகிக் கடிதங்கள் எழுதுகிறார்கள். எல்லாம் எழுத்தளவில் சரி. செயல் அளவில் ஒன்றும் இல்லை. இந்த அன்பர்கள் 1 உருபாவுக்கு, 1 காசு மேனி கூடவேண்டாம், ஒவ்வொருவரும் மாதம் தோறும் உருபா 5மேனி அனுப்பினாலே ஒரு மாதத்திற்கு 1319×5= 6595 உருபா ஆகுமே.

அய்யா, எல்லோரையும் போல நானும் எழுத்தளவில் இல்லாமல் செயல் அளவில் 1988,11-ஆம் மாதம் முதல்,மாதம் தோறும் உருபா ஐந்து அனுப்ப முடிவு செய்து விட்டேன். வழிகாட்டியாக 9-11-88 இன்று உருபா 5.00 ஐப் பணவிடை மூலம் தங்களுக்குத் தனித்தமிழ் பரப்புவதற்காக அனுப்பியுள்ளேன்.

இத்துடன் எனது மனம் நிறைவு பெறவில்லை. இந்த மாதத்திலிருந்து குறைந்தது "தமிழ்ச்சிட்டு" இதழுக்காகிலும் உறுப்பினர் சேர்த்து அனுப்பவும் முடிவு செய்துள்ளேன். இதே போன்று ஒவ்வொரு மாதமும் உறுப்பினர்கள் சேர்த்து அனுப்புவேன். இந்த மாதம், தோழர் எசு. நசீர் அகமது என்பவரிடமிருந்து வாங்கி 9-11-88 அன்று பணவிடை மூலமாக அனுப்புகிறேன். நான் எல்லா இடங்களிலும் தனித்தமிழில் பேச வேண்டும், எழுத வேண்டும் என்று முயலுகிறேன். இக்கடிதத்தில் பிழைகள் இருப்பின் பொறுத்தருள வேண்டுகிறேன். வணக்கம்.

— அன்பன் — கா. இராசகோபாலன், கடலூர்-1.

## புகழ்வேந்தன் புகழ் வாழ்க!

உறைத்த தென்மொழி, தமிழ்நிலம் அன்பரும், தீவிரக் கொள்கைப் பற்றாளரும், ஏரல், புலவர் சிவசங்கு அவர்களின் திருமகனும், சென்னை, வேந்தன் இரும்பு அங்காடியின் உரிமையாளரும் ஆகிய சி. புகழ்வேந்தன் அவர்கள்,சென்ற மாதம் திடுமென மாரடைப்பால் காலமானார் என்னும் செய்தி கேட்டு அதிர்ச்சியடைந்தோம். தென்மொழிக்கு இஃது ஒரு பேரிழப்பு. ஆற்றொணாத் துயரில் மூழ்கியிருக்கும் குடும்பத்தார் அனைவர்க்கும் தென்மொழி தன் ஆழ்ந்த இரங்கலையும் வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்கிறது.

Scanned with CamScanner

# இதோ நீங்கள் கேட்ட தொகை! இதழைத் தொடர்ந்து நடத்துங்கள்!

(ஆசிரியர் குறிப்பு: சென்ற இதழில் வந்த நம் அறிக்கையைக் கண்டு துணுக்குற்று, எட்டப்பர்களுக்கும், வீடணர்களுக்கும், பிரகலாதன்களுக்கும், சுந்தரபாண்டியர்களுக்கும், மூப்பனார், சிதம்பரங்களுக்கும் இடையில், ''இதோ நாங்களும் இருக்கிறோம்'' என்று இளைஞர்கள் பலர், நல்லுள்ளங்கள் சில, நாம் வைத்த கடுமையான கட்டுதிட்டங்களுக்கிடையில், கருத்துகளை மட்டுமின்றி, அவற்றுக்கான காசு, பணங்களையும் நமக்கு அனுப்பி, ''மூன்று இதழ்களையும் தொடர்ந்து நடத்துங்கள்; தொய்வுக்குத் தோலா நெஞ்சங்களாக, சுமை தாங்கும் தோள்களாக நாங்கள் இருக்கிறோம்', என்று மடல்கள் எழுதி வருவதுடன், நேரிலும் வந்து, துணிவு கூறி, ஊக்கந்தந்து, அன்பளிப்புகளையும் வாரி வழங்கி வருகிறார்கள். இந்நிலை, நமக்குப் பெருமகிழ்ச்சியையும் பெருநம்பிக்கையையும் ஊட்டினாலும், கடந்த முப்பதாண்டுகளில் நாம் பட்ட துயரங்களுக்கும், தொல்லைகளுக்கும், இழப்புகளுக்கும் ஈடாகி விடாது என்றாலும், நம் பகைவர்களுக்கும், ''நாம் அழிந்து போக வேண்டும்; இவ்விதழ்களும் ஒழிந்து போக வேண்டும்'' என்று கனவு காணும் இரண்டகர்களுக்கும், நம்மையும் நம் உணர்வுகளையும், நம் இளைஞர்களையும் அவர்தம் வினைப்பாடுகளையும், அறவே நடு நடுங்கச் செய்யவும், இதழ்களையும் நம்மையும் நெடுந்தொலைவு ஓடோடச் செய்யவும் அஞ்சத் தகுந்த நடவடிக்கைகளையும் அடாவடித்தனங்களையும் செய்த இராசீவின் கொடிய கொடுங்கோல் முறைகேடர்களுக்கும் ஒரு வெல்விளி (சவால்) வினைப்பாடு என்றே நாம் கருதி மகிழும்படி உள்ளது. வெறுஞ் சொற்களால் மட்டுமன்றித் தாம் ஈட்டிய அரும்பொருளாலும் துணைநிற்க உறுதி பூண்ட அம் மறத்தமிழ் நெஞ்சங்களை நாம் வாழ்த்துக் கூறி வரவேற்கிறோம். அந்த வகையில் இம் மடல் தொடரை மகிழ்ச்சியுடன் வெளியிடுகிறோம்.

அன்பர்கள் இவற்றைப் படித்து, மேலும் மேலும் இப் பணிகளைத் தொடருவதில் ஊக்கமும் உறுதியும் பெறுமாறு துணை நிற்பார்களாக!

— பெருஞ்சித்திரனார்.)

## 1. அஞ்சற்க! அனைத்து வகையிலும் துணையாய் இருந்து வருவோம்!

தென்மொழி, தமிழ் நிலம், தமிழ்ச்சிட்டு இதழ்கள் நிறுத்தப்படுமென்று, அவற்றில் வந்த அறிக்கையைப் படித்தவுடன் மறுநாளே பொன்னேரியிலிருந்து ஒரு மருத்துவ அருள் நெஞ்சம் தென்மொழி அலுவலகத்திற்கு ஓடோடி வந்து பதறியவாறு, ''ஐயா, இதழ்கள் நிறுத்தப்படுவது பற்றிய அறிக்கையைப் பார்த்தவுடன் நெஞ்சம் கலங்கிப் போனோம். நானும் குடும்பமும் எங்களால் இயன்றவரையில் அனைத்தானும் துணை நிற்பதென்று உறுதி பூண்டோம். அதற்கு முன் அடையாளமாக இதோ இந்தத் தொகையைத் தொடக்க வரவாக வைத்துக் கொள்ளுங்கள்''

என்று ஆசிரியரைப் பார்த்துத் துயரக் குரலுடனும் அன்பு நெகிழ்ச்சியுடனும் கூறித் தம் சட்டைப் பையிலிருந்து எடுத்து ஆசிரியர் முன்னிருந்த மிசையின் மீது வைத்த தொகை உரு328-50. இதை வைத்துவிட்டுத் 'தாங்கள் இதழ்களை நிறுத்தாமலிருக்கக் குறித்த தொகுமொத்தத் தொகையில் இருபதில் ஒரு பங்கைச் சனவரி இறுதிக்குள் தங்களிடம் கொண்டு வந்து சேர்க்கிறேன்' என்று உறுதி கூறிவிட்டுத் தம் பெயரையும் வெளிப்படுத்த வேண்டாமென்று கண்களில் நீர்மல்க வேண்டிச் சென்றார்.

ஆசிரியர், அவரிடம் ''இறையருளின் திருவுளப்படி நடப்பது நடக்கட்டும்; தாங்கள் ஒன்றுக்கும் வருந்த வேண்டாம்'' என்று அவர்க்கு விடைதந்து அவரை வழியனுப்பி வைத்தார்கள்.

## 2. தங்களின் மன அமைதிக்கும் நீண்ட வாழ்நாளுக்கும் இறைஞ்சுகிறோம்!

அன்பு நிறை ஐயா, அவர்களுக்கு

வணக்கம். 'தங்களின் பணியில் எங்களின் சிறுதுளி' தங்களின் மன அமைதிக்கும் நீண்ட வாழ்நாளுக்கும் இறைஞ்சுகிறோம்.

வணக்கங்களுடன், — சாம்பசிவம், மன்னார்குடி.

(இவரெழுதிய 20 சொற்களுக்கும், சொல்லுக்கு உருபா 15 மேனி, வரப்பெற்ற தொகை உரு 300-)

## 3. இதழ் தடைப்படாமல் இருக்க...!

பேரன்பின் ஐயா, அவர்களுக்கு,

வணக்கம். என்னால் இயன்ற தொகை ... இதழ் நடத்தல் தடைப்படாமலிருக்க. பண்புடன்.

— சி. அ. இரவி, மேட்டுப்பாளையம்.

(இவரெழுதிய 15 சொற்களுக்கும், சொல்லுக்கு உருபா 10 ஆக வரப்பெற்ற தொகை உரு 150/-)

## 4. உயிரோட்டத்தைத் துண்டிப்பதா? இதழ்கள் கட்டாயம் வெளிவர வேண்டும்!

ஐயா அவர்களுக்கு !

வணக்கம். தங்கள் அறிக்கை கண்டோம், உண்மையாளர்களுக்கு இன்றைய நிலையில் மதிப்பில்லை, எனினும், தமிழ்நாட்டில் தங்களைப் புரிந்து, தங்கள் வழிக்கு வந்துள்ள அன்பர்களுக்கு உறுதுணையாக — தொலைத் தொடர்புக் கருவியாக உள்ள இதழ்களை நிறுத்துவது, உயிரோட்டத்தைத் துண்டித்து விடுவதாக ஆகுமே, ஐயா!

எனவே அருள்கனிந்து, தொடர்புகள் என்றும் இருக்க, வரும் இளைஞர்களுக்கும் எழுச்சியூட்டக் கட்டாயம் இதழ்கள் வெளிவர வேண்டுமாய்க் கேட்டுக் கொள்கிறோம். அன்புள்ள,

நா. வினைதீர்குன்றன், 2. சேகர். காரைக்குடி. 1.

(இம் மடலில் உள்ள 53 சொற்களுக்கும், சொல் ஒன்றுக்கு உரு 10/- மேனி வரப்பெற்ற தொகை உரு 530/-) (தொடரும்)

Scanned with CamScanner

# பெருஞ்சித்திரனார் நேருரைகள்.

("உண்மை" இதழின் சார்பாக உலகத் தமிழின முன்னேற்றக்கழக முதல்வரும் "தென்மொழி" ஆசிரியருமான பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களை 27-4-82 செவ்வாய் மாலை 6 மணி அளவில் அவரது இல்லத்தில் பாவலர் கலி. பூங்குன்றன் நேருரை கண்டார். உடன் பெரியார் பேருரையாளர் பேராசிரியர் ந. இராமநாதன் அவர்களும் சென்றிருந்தார்கள். பாவலரேறு அவர்கள், அவர்களை அன்புடன் வரவேற்று மகிழ்வு செய்தார்கள்.) (சென்ற இதழ்த் தொடர்ச்சி)

அப்பொழுது பொன்னம்பலனார், "இவர் (என்னைச் சொல்லுகிறார்) உயர்நிலைப் பள்ளியிலே என்னுடைய மாணவராக இருந்தார். இந்த அளவு அவர் வளர்ந்திருப்பது எனக்கு மகிழ்ச்சியாக இருக்கிறது. இங்கெல்லாம் இருந்து பணியாற்றுவது, நான் கற்றுக் கொடுத்த கல்வியின் பேற்றை நான் பெற்றது போல் மகிழ்கின்றேன்" என்று குறிப்பிட்டார்.

உடனே பாவாணர் "உயர்நிலைப் பள்ளியிலே உங்கள் மாணவர். கல்லூரியிலே அவர் என் மாணவராக இருந்தார்; அதனால் எனக்குப் பெருமை" என்றார்.

உடனே பாவேந்தர் "இந்தாங்க...... அதெல்லாம் அப்போ ...அன்றைக்கு அவர் உங்கள் மாணவர். இன்றைக்கு இவர் என் மாணவர்" என்று சிரித்துக் கொண்டே சொன்னது இன்றைக்கும் எனக்கு நினைவில் இருக்கிறது.

இப்படிப் பல்வேறு செய்திகள் அந்த ஆறாண்டுக் காலத்தில் ஒவ்வொரு நாளும் அவருடைய வீட்டிற்குச் சென்று ஒவ்வொரு செய்தியையும் பேசிக் கொண்டிருந்திருக்கின்றோம்.

எந்த நூலை அவர் அன்றைக்குக் கீழே போட்டாரோ (முதன் முதலாகச் சந்தித்த பொழுது கொடுத்த இரண்டு பாவியங்களில் ஒன்றாகிய) அந்த நூலை அவரது செலவிலேயே அச்சிட்டுக் கொய்யாக்கனி என்ற பெயராலே அவரது அச்சகத்திலேயே 1956-இல் வெளியிட்டார். பாவேந்தர் (இப்பொழுது அந்நூல் முதுகலைக்குப் பாடமாக இருக்கிறது.) பழனியம்மாள் அச்சகம் என்று போட்டிருக்கும் அதிலே. எனக்கு இலவயமாய்க் கொடுத்தார்கள். அது அச்சாகிக் கொண்டு வருகின்ற பொழுது, நான் அவர்களிடத்திலே மதிப்புரை கொடுங்கள் என்று எதையும் கேட்கவில்லை.

ஆனால் அவரே ஒரு மதிப்புரை எழுதி, அந்த மதிப்புரையை மன்னர் மன்னனிடம் கொடுத்து அதையும் சேர்த்து அச்சுப் போட்டு விடும்படி கொடுத்து விட்டார். அந்தப் பாட்டு:

கள்ளம் எப்படி, அப்படிக்
  கடுகளவும் இலாத நெஞ்சினர்; முக்
கனிகள் எப்படி அப்படிப்
  போன்றமுத் தமிழின்மேல் அன்பர்;

குள்ளம் எப்படி அப்படி
  யிலாப் பெருங்கொள்கையுடையார்;
குறைகடல் எப்படி அப்படிக்
  குணநிறை துரைமாணிக்கனார்

வெள்ளம் எப்படி அப்படிச்
  செந்தமிழ்ச் சொற்பெருக்கேற
மேன்மை எப்படி அப்படிப்
  போன்ற நடையில்தம் நல்ல
உள்ளம் எப்படி அப்படித்
  தந்தோர் உயர்தமிழ் நூல்தான்
உலகம் எப்படி அப்படிப்
  பட்டதோர் நிலைகொள் கொய்யாக்கனியே!

என்று மதிப்புரை கொடுக்கிறார். இ'து எனக்குத் தெரியாது.

இந்தப் பாட்டை அச்சேற்றிவிட்டு மன்னர்மன்னன் என்னிடம், 'என்னய்யா தலையிடத்திலே போய் ஏதாவது மதிப்புரை கேட்டீர்களா' என்று கேட்டார். நாங்கள் எல்லாம் பாவேந்தரை "தலை" என்றுதான் கூப்பிட்டுக் கொள்வோம். பாவேந்தருக்குப் பல பெயர்கள் உண்டுங்க.

புதுவையிலே வண்டிக்காரர்களிடத்திலே பாரதிதாசன் என்றால் யார்க்கும் தெரியாது. அவர்களிடத்திலே 'வாத்தியாரென்று' சொன்னால்தான் தெரியும்.

தமிழன்பர்களுக்குள்ளே நாங்கள் சொல்லிக்கொள்வது "தலை" இருக்கிறாரா? எந்த ஊருக்குப் போயிருக்கிறார் "தலை"? என்றைக்கு வருவார்? என்றுதான் பேசிக்கொள்வோம்.

அதுபோல "தலை"யிடத்திலே மதிப்புரை கேட்டீங்களா என்று மன்னர் மன்னன் கேட்டார். நான் 'ஒன்றும் கேட்கவில்லையே' என்றேன்.

'என்னய்யா, இப்படிப்பட்ட மதிப்புரையை யாருக்கும் கொடுத்ததில்லை—உங்களுக்குக் கொடுத்திருக்கிறார்' என்றார் அவர். இப்படி ஏராளமான செய்திகள் உண்டு. இவற்றை எல்லாம் இதுவரை எழுதியதில்லை.

நேருரை கண்டவர்: இவை எல்லாம் பதிவாக வேண்டிய முகாமையான செய்திகள்.

பாவலரேறு: ஆமாம்...ஆமாம்!

நேருரை கண்டவர்: பாரதி, புரட்சிப் பாவேந்தர் பாரதிதாசன் இருவரையும் தாங்கள் எந்தக்கோணத்தில் பார்க்கிறீர்கள்?

பாவலரேறு: ஆசிரியர் என்ற தன்மையோடு பாரதிதாசன் என்று பெயர் கொண்டு விட்டார்களே தவிர உண்மையாகவே அவர் பாரதிக்குத் தாசன் என்று சொல்லுவதிலே எனக்கு வருத்தந்தான்! பாரதிக்கு ஆசான் அவர் என்று கூட்டங்களிலே நான் சொல்லுவதுண்டு.

Scanned with CamScanner

பொதுவாகத் தமிழ், தமிழ்மக்கள் சீர்திருத்தக் கொள்கைகள் என்பவற்றிலே பல பல வேறுபாடுகள் இருவருக்கும் உண்டு. பாரதியார் விடுதலை முயற்சி இருந்த காலத்திலே பாடியிருக்கலாம். ஆனால் பாரதிதாசனுக்கு இருந்த உண்மையான தமிழ் உணர்வு பாரதியாரிடம் இருந்ததா என்பது எனது ஐயம், தமிழ்நாட்டிலேதான் இரண்டு பாவலர்களும் பிறந்தார்கள். ஆனால் தமிழார்வத்தை அவர்கள் வெளிப்படுத்துகின்ற வகை-வேறு வகையானது. பாரதியாரின் தமிழ்ப் பற்று மொழியை வளர்க்கின்ற தன்மையிலே இருக்கவில்லை.

ஆனால் பாதிதாசன் தமிழ்மொழியிலே பற்று வைத்திருந்த அந்த நிலை, தமிழ்மொழியை வளப்படுத்த வேண்டும்; அதில் ஏற்பட்டு இருக்கின்ற தொய்வுகளை எல்லாம் சரிப்படுத்தி, எதிர் காலத்திலே எல்லாத் துறைகளிலும் தமிழை ஒரு தகுதிப் பாடுடைய மொழியாகச் செய்ய வேண்டும்; தமிழ்மக்கள் புதுமையான இலக்கியங்களைப் படைக்க வேண்டும் என்று கருதினார். ஏற்கனவே இருக்கும் இலக்கியங்களை அடிமை இலக்கியங்கள் என்று பாரதிதாசன் சொல்லுவார்.

கம்பனின் கேடு :

இந்தக் கம்பராமாயணத்திலே உள்ள பாடல்களின் சுவையையெல்லாம் அவர் பாராட்டினாலுங்கூட அந்தத் தமிழைக் கொண்டு, ஆரியத்தை நிலைக்கச் செய்து விட்டாரே என்பதிலே அவர் மிக வருத்தம் கொண்டிருந்தார். குறிஞ்சித் திட்டு என்ற நூலிலே இவற்றை நீங்கள் பார்க்கலாம். தமிழ்மொழிக்காகவும், தமி-ழினத்துக்காகவும் தமிழறிஞர்கள் என்னென்ன கருத்துகள் கொள்ளவேண்டும் என்பனவற்றையெல்லாம் பாவேந்தர் அதில் கூறுவார்.

சுருக்கமாகச் சொன்னால் பாரதியார், தமிழைச் சமசுக்-கிருதத்தைவிட அல்லது சமசுக்கிருதத்திற்கு இணையான மொழி என்கிற அளவுக்குக் கொள்ளவில்லை.

சமசுக்கிருதத்தை மூலமாக்க் கொண்டு தமிழ் மொழி ஒரு சிறந்த மொழி என்கிற அளவிலே—சமசுக்கிருதத்தைவிடக் கொஞ்சம் தாழ்ந்த மொழி என்ற அளவிலேதான் பாரதி கொள்கின்றார்.

மொழிமீது காதல் !

பாவேந்தருக்குத் தமிழ் மொழியிலே இருக்கின்ற அந்த அன்பு, பாவேந்தருக்கு முன்பு இருந்த வேறு எந்தப் புலவர்களிடத்திலும் கிடையாது. ஏனோ தெரியவில்லை—தமிழ் மொழியினிடத்-திலே அவருக்கு அவ்வளவு காதல்!

என் உயிரே, என் அன்பே, கற்கண்டுக் கட்டியே என்று விளிக்கிறார் பாருங்கள். தமிழும் தமது உயிரும் ஒன்றுனது என்-பதைப் பல இடங்களிலும் அவர் பாடியிருக்கிறார். அதாவது தானே தமிழும் உயிருமாகக் கலந்து இருப்பதாகவெல்லாம் சொல்லியிருக்கின்றார்.

தமிழ்மொழிக்குப் பாவேந்தர் உண்மையாகவே ஒரு மறு மலர்ச்சிப் புலவராகவே வந்து சேர்ந்தார்.

கொள்கை நோக்கிலே இவர் 'தமிழ்மொழியை இனத்திற்காகப் பயன்படுத்தினர்' ஆனல் பாரதியாரோ 'தமிழ் மொழியை மதத்திற்காகப் பயன்படுத்தினர்' என்று சொல்லலாம்.

பாவேந்தர் தமிழ்மொழியிலே இன மறுமலர்ச்சிக் கருத்துகளையும் பொதுவுடைமைக் கருத்துகளையும் மிக விரிவாகச் சொல்லியிருக்கிறர். தமிழ்மொழிதான் மக்களுக்கு இனவுணர்ச்சி ஊட்டக் கூடியது என்பதை மிக விரிவாகச் சொல்லியிருக்கிறர்.

பாரதியின் ஆரியப் பற்று :

பாரதியார் தமிழ் மொழியை வாழ்த்துவதுபோலப் பல பாடல்கள் பாடியிருக்கிறரே தவிர, பெரும்பாலும் ஆரிய நாடு— ஆரிய மொழி என்கிற பற்றிலேதான், போக்கிலேதான் போகிறர். எனவே இரண்டு பேரும் அவர்களுடைய கொள்கை நிலையிலும் சரி, தாய் மொழிப்பற்றிலும் சரி, தமிழ் மக்கள் நலப் பற்றிலும் சரி, இரண்டுவகையான கோணங்களைக் கொண்டிருக்கிறர்கள் என்றுதான் சொல்ல வேண்டும்.

பாவேந்தர் ஒருவர்தாம் தமிழ்மொழியை மக்களுக்குப் பயன்படும்படியாகப் புலவர்கள் வரிசையிலே செய்தவர்.

அதற்கு முன்னலே தமிழ்மொழி கற்றவன் எதை எழுதுவான்? ஏதாவது சமய, சாதித் தொடர்பான ஒரு நூல் எழுதுவான். அந்தாதி போன்ற நூலை யாத்திருப்பான். சிறிய அகவையில் நம் பாரதிதாசன் அவர்களும் சுப்ரமணிய துதியமுது போன்ற பாடல்களை இயற்றியவர்தாம். அ'து ஒரு குறுகிய காலம். அதன் பின் அவர் மறுமலர்ச்சிப் பாடல்களைத்தாம் இயற்றினர்.

தமிழைத் தமிழினத்துக்காகப் பயன்படுத்திய முதல் பாவலர் நமது பாவேந்தர் பாரதிதாசன்!

நேருரை கண்டவர் :

தந்தை பெரியாரின் கருத்துகள் இந்த இனத்திற்கு எந்த அளவிற்குத் தேவை என்று கருதுகின்றீர்கள்!

பாவலரேறு :

அய்யா, அருமையான கேள்வி! ஆனல் நான் ஒன்றை உங்களுக்குச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன். தந்தை பெரியாரைப்பற்றி நான் நினைக்கிறபோது அவருடைய கருத்துகளும் அவருடைய ஓயாத உழைப்பும் அவருடைய முழு வாழ்க்கைத் தொண்டும் என்கின்ற நிலைகளை நாம் பார்த்து வியப்பதற்கும் அவற்றைப் பற்றி அறிவதற்கும்தான் நமக்கு ஒரு உணர்வு தேவையே தவிர, எவ்வளவு தேவை எவ்வளவு தேவை இல்லை என்பதனைப் பற்றி ஆராய்ந்து கொண்டிருக்கும்படியான அந்த உணர்வுகள் நமக்குத் தேவையில்லை! ஏனென்று சொன்னல் நமக்கு இப்படிப்பட்ட ஒரு சிந்தனையை உருவாக்கிக்

Scanned with CamScanner

கொடுத்தவரே அவர்தாம்! நாம் வேண்டிக்கொண்டு அவர் செய்யவில்லை. நாம் ஆராய்ந்து இது தேவை என்று அவரை நாம் கேட்டுக் கொண்டு அவர் அதைத் தொடங்கவில்லை. இந்த இனத்தைப் பற்றி நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னாலே முழுமையாக உணர்ந்து கொண்ட ஒரே ஓர் அறிஞரும், தலைவரும், கருத்துப் பேராசிரியரும், அவரே! உண்மையிலே இதற்கு முன்னே இருந்த அறிஞர்களைவிட, அவர்கள் தந்த கருத்துகளை விட மக்கள் நலன் கருதுகின்ற கருத்துகள் இந்த நாட்டிலே பெரியார் அவர்களால்தாம் தரப்பெற்றன என்று சொன்னால் யாருக்கும் அதைப்பற்றிய ஐயுறவு தேவையில்லை! ஒரு நீண்ட நெடுங்கால இருள் விலக தமிழகத்தில் விடிவெள்ளியாகத் தோன்றுகிற ஒரு கதிரவன் போல்—ஒரு பகலவன்போல் அவர் இருந்தார்.

பெரியாரின் தொண்டு இந்த உலகத்திற்குக் கிடைக்காமல் போயிருந்தால் இந்த இனம் இன்னும் ஒரு 500, 1000 ஆண்டுக் காலத்திலே படிப்படியாகத் தேய்ந்துப்போய்ப் பழைய கிரேக்க இனம்போல் இந்த உலகத்தை விட்டே அழிந்து போயிருக்கும் அதை நான் துணிந்து சொல்வேன். ஏனென்று சொன்னால் மொழி வழியிலே, இனவழியிலே, இலக்கியங்கள் வழியிலே கலை வழியிலே, ஆட்சி அரசாளுமை வழியிலே ஆகிய எல்லாவற்றிலும் ஆரிய இனம் நாட்டைக் கவ்வியிருந்தது.

அந்த உண்மைகள் யாராலும் உணரப் பெறாமலிருந்தன. தொடக்கக் காலத்திலே பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு — திருவள்ளுவர் காலத்திலே ஆரியம் இந்த நாட்டைக் கவ்வுகின்ற நிலையை — அது பற்றிய எச்சரிக்கைக் கருத்துகளை சொல்லியிருக்கிறார். அதைத் தொடர்ந்து எந்தப் புலவரோ, எந்த அறிஞரோ, அல்லது எந்த ஒரு தலைவரோ அல்லது எந்த ஓர் அரசரோ இனத்துக்கான வளர்ச்சிக்காக—உண்மையான மீட்சிக்காக — அறிவு முன்னேற்றத்திற்காக எந்தக் கருத்தையும் நூல் வடிவாகவோ அல்லது வேறு வகையான தொண்டு வடிவாகவோ சொன்னது போல் நான் படித்ததில்லை. அதாவது கிறித்துப் பிறந்து 200 ஆண்டுகளுக்குப் பின்னாலே இருந்து வருகிற சிலப்பதிகாரம், மணிமேகலை, அல்லது தொடக்கக் கால நூல்கள், பாவியங்கள், கம்பராமாயணம் மகாபாரதம் போன்ற நூல்கள் மற்ற ஏராளமான சிற்றிலக்கியங்கள் பேரிலக்கியங்கள் எல்லாவற்றையும் ஆராய்ந்து அலசிப் பார்த்தாலுங்கூட எல்லாம் ஆரியச்சார்பான கருத்துகளைத்தாம் வெளியிட்டிருக்கின்றன. எங்காவது தமிழ் மொழியைப் பற்றியோ, தமிழ் இனத்தைப் பற்றியோ உணர்ந்து கொண்டது போல ஓர் இடத்திலும் கிடையாது. இலக்கியம் என்று சொன்னாலே அ'து ஆரியக் கருத்துதான். கதைகள் என்று சொன்னாலும் அவை ஆரியக் கருத்துகள்தாம். மக்கள் நலன் கருதுகிற கருத்தை வெளிப்படுத்திய ஓர் ஆசிரியனையும் பார்க்க முடியாது. அவ்வளவு பெரிய நீண்ட நெடுங்காலத்திற்குப் பின்னாலே உண்மையாகவே மக்களைப் பற்றிக் கவலைப்படு

# 21-ஆம் நூற்றுண்டு -- ஓர் அறிவியல் பார்வை!

(புகழ்பெற்ற சோவியத்து அறிவியல் புதின எழுத்தாளரும், சிறந்த சிந்தனையாளருமான அலெக்சாந்தர் கசாந்த்சேவ் அவர்கள் நேருரை ஒன்றில் வெளிப்படுத்திய கருத்துகள் இவை.)

— 21-ஆம் நூற்றுண்டில் என்ன விண்வெளிக் கண்டுபிடிப்புகள் நிகழக் கூடும்? மேலும், செவ்வாய்க் கோளுக்கு எப்பொழுது செலவு (பயணம்) மேற்கொள்ளப்படும்?

தொழில் நுட்ப முறையில். இன்றே கூட நாம் செவ்வாய்க் கோளுக்குச் செலவை மேற்கொள்ள முடியும். ஆனால், நில ஈர்ப்பு ஆற்றல் சிறிதும் இல்லாத (சுழியம்) நிலையில், மாந்தனல்

(முன் பக்கத் தொடர்ச்சி)
கின்ற தொண்டு என்று சொன்னால் அது பெரியார் ஒருவர் தொண்டுதான்.

முன்பு கூடப் புலவர்கள் வேண்டுமானல் நிறையப் பேர் இருந்திருக்கின்றார்கள். இலக்கியங்கள் பண்ணி இருக்கிறார்கள். அந்த இலக்கியங்கள் தமிழனுடைய தன்மான உணர்வைச் சிந்திக்க செய்ய முடியாதபடி செய்துவிட்டன என்று சொன்னால், அஃது உண்மையாகவே பொய்யாகாது. ஆரியர்கள் அந்த இலக்கியக் கதைகளிலேதாம் தமிழர்களைச் சிந்தனையற்றவர்களாக மாற்றி விட்டார்கள். நீண்ட நெடுங்காலமாக இராமாயணம், மகாபாரதம், புராணக் கதைகள், புளுகுக் கதைகள் தமிழர்களின் சிந்தனை வழிகளின் ஊற்றுகளையே அடைத்து விட்டன. அவர்களுக்குப் பகுத்தறிவு உணர்ச்சியே கிடைக்காமல் போய்விட்டன.

அவர்களுக்கு நாமெல்லாம் ஒரே இனம் என்கின்ற உணர்ச்சி கூட இல்லாமல் போய்விட்டது. எல்லாம் அடிமைகள்; அஃதாவது பிராமணர்களுக்காகவே உழைக்கப் பிறந்தவர்கள் என்கிற நிலை தான் இருந்தது. சேர, சோழ, பாண்டியர்கள் என்று பெருமையாக நம்முடைய முன்னோர்களை எதற்கு நாம் பெருமையாக கருதினோம் என்று சொன்னால், அந்தணர்களுக்கு அவர்கள் பெரிய அடிமைகளாக இருந்தார்கள். அந்தப் பார்ப்பன அடிமைகளாக இருந்த அவர்கள்தாம் மக்களுடைய அனைத்து முன்னேற்றங்களுக்கும் தடையாக இருந்தார்கள். எந்த அரசனை எடுத்துக் கொண்டாலும் கோயில்கள் கட்டினான்; குளங்கள் வெட்டினான். அறச்சாலைகள் தருமச்சாலைகள் வைத்தான்; பெரிய பெரிய அறங்களைச் செய்தான், யாகங்களைச் செய்தான், பார்ப்பனர்களுக்கு பார்ப்பனச் சேரிகளை அமைத்துக் கொடுத்தான் என்றுதான் இருக்குமே தவிர; மக்களுக்குக் கல்விச் சாலைகளைக் கட்டினான் என்று இருக்காது. மக்கள் அறிவு வளர்ச்சிக்காகப் பெரிய மன்றங்களை அமைத்தான் என்று இருக்காது. அறிவு வளர்ச்சிக்காக நம்முடைய அரசர்கள் செய்த முயற்சி எந்த ஒரு வரலாற்றிலேயும் குறிப்பிடப் படவில்லை!

(தொடரும்)

Scanned with CamScanner

இரண்டாண்டுகள் வாழமுடியுமா என்பதுதான் பெரிய சிக்கலாகும். விண்வெளியில் தாக்குப் பிடிப்பதில் உருசிய விண்வெளி வீரர்கள் தாம் மிகுதிறன் படைத்துள்ளனர். ஏறத்தாழ ஓராண்டுக் காலம் அவர்கள் விண்வெளியில் உலகைச் சுற்றி நெடுஞ்-செலவு மேற்கொண்டுள்ளனர். ஆனால், அ'து ஒரு வழிச் செலவு மட்டுமே என்றுதான் கூற முடியும்.

இந்த நூற்றாண்டிலேயே செவ்வாய்க்குக் கூட்டுச் செலவை மேற் கொள்ளும்படி அரசியல் தலைவர்களையும், அறிவியல் அறிஞர்களையும் தூண்டவேண்டுமென்று உலகத் தாளிகைகள் அண்மைக் காலமாக அடிக்கடி எழுதி வருகின்றன. தொழில் வளர்ச்சி பெற்றுள்ள பல நாடுகள் இந்த வீரச் செலவில் சேரக் கூடும்.

நில ஈர்ப்பு விசை இல்லாத நிலைமையின் வாய்ப்புக் குறையினால் தாக்கப்படாமல், 21-ஆம் நூற்றாண்டில்தான் இச் செலவு மேற்கொள்ளப் பெறும் என்று நான் கருதுகின்றேன். வருங்-காலக் கண்டுபிடிப்புகள் மீது சார்ந்துள்ளன. ஆனால் அவற்றை அப்படியே பின்பற்ற வேண்டிய தேவையில்லை.

இனி, பழைமை நிலைகளையே சிந்திப்பதைக் கைவிட்டு விட்டுக் கற்பனையால் இதனைச் சிந்திப்போம். இரண்டு விண்கலங்களைக் கயிற்றால் கட்டி, ஒரு சீன மந்திரக்காரரின் தேநீர்க் கிண்ணங்-களைப் போல, அவற்றைச் சுழலச் செய்வோம். விரி நடுவச் சுழற்சி ஆற்றல் நில ஈர்ப்பைப் போல் செயல்படும். இவ் வழி-யில் விண்கலத்தின் வடிவமைப்பில் எதையும் மாற்றாமலேயே தேவையான ஈர்ப்பு விசையை — விளைவை — நாம் பெறமுடியும்.

செவ்வாய்க் கோளுக்குப் பறந்து செல்லும் கருத்தை அறி-வியலறிஞர்கள் நீண்ட காலமாகச் சிந்தித்து வந்துள்ளனர். ஏனெனில், அங்கு உயிரினம் இருக்கிறதா என்று கேள்விக்கு இன்று வரையிலும் விடை கிடைக்கவில்லை. செவ்வாயில் உயிரினம் இருக்கிறது என்று கருதுவதற்குச் சில அடிப்படைகள் உள்ளன. காய்ந்துபோன ஆறுகளின் நீர்க்கால்களும், மிகவும் உயரமான நாற்கூம்பு (பிரமிட்டு)களும் (இவற்றை வைக்கிங் — 1 படம் பிடித்துள்ளது) செவ்வாயில் ஏன் உள்ளன? 21-ஆம் நூற்-றாண்டில் இவற்றுக்கான விடைகளை நாம் தெரிந்துகொள்வோம்.

அடுத்து, மக்களைக் கொன்று குவிக்கும் படைக்கருவிகள் சிக்கல் மிகவும் கடினமான ஒன்றாகும். வருகின்ற நூற்றாண்டில் நமது உடனடிச் சிக்கல்களில், குறிப்பாக, விண்வெளி ஆய்வில் செலுத்தப் படுவதைக் காட்டிலும் இந்த நிலக்கோளிலேயே உயிர் வாழ்க்கையைப் பாதுகாக்கும் சிக்கலுக்கு அதிக கவனம் செலுத்தப்படும். அணுக் கருவிகளை ஒழிப்பதற்கான தீர்மானங்கள் மிகவும் முற்போக்கானவை. வரும் வழிமுறை அதற்காக நமக்கு நன்றி கூறும். அணுக் கருவிக் குவியல்கள் படிப்படியாகக் குறைக்கப்படுவது நடைபெற்று வருகிறது. முதலில் 4. விழுக்-

காடு, பின்னர் மற்ருெரு 50 விழுக்காடு; ஆனுல் அதற்குப் பின்-னும் 46 விழுக்காடு கருவிகள் இருக்கும்.

அறிவியல் அறிஞர்களின் மதிப்பீடுகளின் படி, இன்றுள்ள அணுக் கருவிகளின் அளவு, உலகில் உயிர் வாழும் அனைத்தை-யும் மீண்டும் மீண்டும் 14 தடவை அழிப்பதற்குப் போதுமானவை யாகும். திட்டமிட்டுள்ள குறைப்புகளுக்குப் பின்னும் உயிர் வாழ்க்கையை 7 தடவைகளுக்குச் சற்றுக்குறைவாக அழிப்பதற்குப் போதுமான கருவிகள் இருக்கும். நிலைமையைக் கடுமையாக்குவது என்னவெனில், அணுக்கருவிகளைக் கொண்டிருக்கும் நாடுகளின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாகும். இது குறித்து ஏதாவது செய்யப்பட வில்லையெனில், நிலைமை மேலும் கடுமையாவது உறுதி. ஆனுல் படைக்குறைப்புத் துறையில் இவ்வளவுதான் செய்யப்பட்டு உள்ளது.

21-ஆம் நூற்ருண்டு 'முழுக்கொலைக் கருவிகளை' — அணுக் கருவிகளும் வேதியல் கருவிகளும் இல்லா விட்டாலும் வேறு எவ்வகைப்பட்ட கருவிகளையும் முன்னேர்களின் சொத்தாக நாம் பெறக் கூடாதென்று நான் விரும்புகிறேன். நிலத்தில் உயிர் வாழ்க்கையைப் பாதுகாப்பதற்கு நம் ஆற்றலுக்குட்பட்ட யாவற்றையும் செய்ய வேண்டியதே இந்த நூற்ருண்டில் நமக்கு முன் உள்ள முகாமையான செய்தியாகும்.

வருங்காலத்தில் விசைத் தொழில் துறையின் வளர்ச்சி, கடந்த காலத்துடன் பிரிக்க முடியாதவாறு இணைந்துள்ளது. புதிய நூற்ருண்டில் நாம் நுழையும் போது உள்ள நிலைமைகள் குறித்துச் சிந்திப்போம். நாம் எரித்து வருகின்ற மிகவும் முனைப் பாகப் பதப்படுத்தி வருகிற எண்ணெய், எரிவளி, நிலக்கரி மற்றும் பிற கிடைப்பது கடினமாகும். அறிஞர்கள் பலர் அணு விசையின் மீது பெரும் நம்பிக்கை வைத்துள்ளனர்.

நமது காலத்தின் மிகப் பெரிய தவறுகளில் ஒன்று, நிலப்-பரப்பின் மீது அணு மின்நிலையங்களைக் கட்டுவதாகும். அவை நிலப் பரப்புக்குக் கீழே மிக ஆழத்தில் கட்டப்பட்டிருக்க வேண்-டும். அப்பொழுதுதான் மாந்தனுக்கோ, இயற்கைக்கோ எத்-தகைய ஊறுபாடும் ஏற்படாது. செர்னேபிலின் எடுத்துக் காட்டை எடுத்துக் கொண்டு பாருங்கள். சரியாகக் கூறுவதெனில் நான் அணுமின் நிலையங்களை எதிர்க்கவில்லை. கொடுமையான ஏதங்கள் (விபத்துகள்) ஏற்படும் அனைத்து வாய்ப்புகளையும் தவிர்ப்பதற்கு, அவை நிலத்தின் ஆழத்தில் கட்டப்பட வேண்-டும். கதிரியக்கமுள்ள கழிவுப்பொருள் திரட்சியும் ஒரு பெரிய சிக்கலாகும். மேலை ஐரோப்பா, ஏற்கனவே இது தொடர்பான நெருக்கடியை உணர்ந்து வருகின்றது. அமெரிக்கர்கள் பொறுப் பற்ற முறையில் இக் கழிவைக் கடலில் கொட்டி வருகின்றனர். விரைவிலோ காலந்தாழ்ந்தோ இச்சிக்கல், நஞ்சூட்டப்பட்ட மீன்கள், மற்றும் பிற கடல் பண்டங்கள் உருவில் வெடிக்கப் பாவது உறுதி.

(தொடர்ச்சி 31-ஆம் பகக்ம்)

சென்ற இதழ்த் தொடர்ச்சி :

# இந்தியப் பண்பாடா? தமிழ்ப் பண்பாடா?

ரிக்வேதம் சூக்தம் 1-இல் 'அரியூபிய' என்னும் இடத்தில் இந்திரன் உதவியினுல் ஓர் ஆரிய அரசன் தன் பகைவர்களை முறியடித்தான் என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது. இந்த 'அரியூபிய' என்பது அரப்பாவைக் குறிக்கும் என்று கருதப்படுகிறது. மேலும் தாசர்கள் என்று ரிக்வேதத்தில் குறிக்கப்பட்டுள்ளவர்கள் சிந்துவெளி மக்களே என்றும் கூறுகின்றனர்.

சிந்துவெளி நாகரிகத்தில் கண்டு பிடிக்கப்பட்ட உருவ எழுத்துகள் திராவிட மொழிக் கூட்டை, குறிப்பாகத் தமிழைச் சார்ந்தவை என்று மொழியியல் அறிஞர்கள் கூறுகின்றார்கள். இந்தியாவில் கிடைத்திருக்கின்ற மிகப்பழைய எழுத்து அரப்பன் நாகரிக உருவ எழுத்தேயாகும். இந்த எழுத்தில் இருந்துதான் 'பிராமி' எழுத்து வளர்ச்சி பெற்றிருக்கக் கூடும் என்று அறிஞர்களால் கருதப் படுகிறது. அரப்பன் நாகரிகத்தையடுத்து, இந்தியாவுக்கு வந்த ஆரிய இனத்தவருக்கு எழுத்து என்ற ஒன்று இல்லையென்று நம்பப்படுகிறது. அவர்கள் காலத்திய வேதங்கள் அனைத்தும் மனப்பாடமாக்கியே பயிலப்பட்டது என்று கூறப்படுகிறது. (இங்கு நம்பப்படுகிறது, கூறப்படுகிறது என்றெல்லாம் உறுதிப்படுத்தப் பெறுமல் கட்டுரையாசிரியர் கூறுவது அவரது அச்சத்தையே காட்டுகிறது.)

தமிழகத்தில் கி.மு. 4-3-ஆம் நூற்றுண்டில் இருந்தே தமிழ் எழுத்தை எழுதக் கூடிய எழுத்து என்று வழக்கில் இருந்து வந்தது. ('இ'து எப்படிப்பட்ட பேத்தலான கருத்து! திரு. நடன காசிநாதன் என்ன கருதிக் கொண்டு இதை எழுதுகிறுரே தெரியவில்லையே! தமிழில் நமக்குக் கிடைக்கும் அரிய வியப்பான முழுக் குமுகாய நாகரிகத்தின் முதிர்ச்சிப் பேறுன இலக்கிய இலக்கணம் தொல்காப்பியம். இ'து எவ்வளவு பின் தள்ளினுலும் கி.மு. 7-ஆம் நூற்றுண்டினது என்பர் ஆராய்ச்சியறிஞர். ஒரு மொழியில் தொல்காப்பியம் போன்று ஒரு முழு இலக்கண நூல் உருவாக வேண்டுமானுல், அதற்கு முன் அந்த மொழியினம் எந்தெந்த வகையில் பண்பாடும் நாகரிகமும் அறிவும் பெற்றிருக்க வேண்டும். அதன் பின்னன்றோ இலக்கியங்கள் உருவாக்கப் பெற்றிருத்தல் வேண்டும். இவையெல்லாம் எழுத்தில்லாமலே — நடை பெற்றிருக்கும் என்பது கட்டுரையாசிரியர் கருத்தோ? இவரே இவ்வாறு நினைத்தால் எதிரிகள் எவ்வாறு நினைப்பார்? போகட்டும் மேலும் என்ன சொல்கிறுர், என்று பார்ப்போம்.) அந்த எழுத்து 'தமிழ்' என்றும் 'திராவிடி' என்றும் பௌத்த, சமண இலக்கியங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. (பௌத்த, சமண இலக்கியங்களுக்கு எத்துணைக் காலம் முந்தியது, தமிழ் இலக்கியங்கள் என்பதைக் கட்டுரையாசிரியர் உணராரா, என்ன?)

Scanned with CamScanner

அதே காலத்திலோ அதற்குச் சற்றுப் பிந்தைய காலத்திலோ வடஇந்தியாவில் 'பிராமி' எழுத்து வழக்கில் இருந்திருக்கிறது. மௌரியப் பேரரசன் அசோகன் காலத்தில்தான் இந்த எழுத்து நிரம்பப் பயன்படுத்தப்பட்டுள்ளது. எழுத்தைப் பற்றிய ஆய்வு செய்யும் அறிஞர்கள் அசோகன் காலத்தில்தான் இந்த 'பிராமி' எழுத்து உருவாக்கப்பட்டது என்று கருதுகிறுர்கள். அவ்வாறெனில் அதற்கு முன்பே தமிழகத்தில் வழக்கில் இருந்ததாகக் கருதப்படும் 'தமிழ்' எழுத்தில் இருந்து 'பிராமி' எழுத்து வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்றும் ஒரு கருத்து நிலவுகிறது. இதற்கு அடிப்படையாக அரப்பன் உருவ எழுத்து திராவிடர்களின் (தமிழர்களின்) முன்னோர்களைச் சார்ந்தது என்று கருதுவதாலும், அந்த எழுத்தின் வளர்ச்சியே தமிழகத்தில் வழங்கிய 'தமிழி' எழுத்து என்பதாலும், அந்தத் 'தமிழ்' எழுத்தின் சம காலத்திலோ அல்லது அதற்குச் சற்று பிந்திய காலத்திலோ பிராமி எழுத்து தோன்றியது என்று கருதப்படுவதாலும், 'பிராமி' எழுத்து தமிழ், எழுத்தில் இருந்து வளர்ச்சி பெற்றிருக்கலாம் என்று இவர்கள் காரணம் கூறுகிறுர்கள். எ'து எவ்வாறுயினும் அரப்பன் கால எழுத்தில் இருந்துதான் இந்தியாவில் உள்ள அனைத்து எழுத்துகளும் வளர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

ஆதலால் அரப்பன் கால நாகரிகத்தின் சொந்தக்காரர்களான திராவிடர் (தமிழர்)களின் முன்னோர்களின் எழுத்துதான் இன்று பல எழுத்துகளாக மலர்ச்சி பெற்று இந்தியாவின் பல பாகங்களிலும் வழங்கப் பெற்று வருகிறது. ஆதலால் அரப்பன் காலத்து மக்களின் பண்பாட்டுத் தாக்கமே இந்தியாவின் அனைத்துப் பகுதியிலும் தொடர்ந்து வருகிறது எனபதை நாம் உணரலாம். (இந்தத் தொடரில் கட்டுரையாசிரியர் துணிவும் தன்னுரிமையுணர்வும் கொண்டு, அரப்பன் காலத்து மக்களின் என்பதற்குத் 'தமிழின முன்னோரின்' என்றும், 'உணரலாம்' என்பதற்கு, 'உணர வேண்டும்' என்றும் உறுதிப்பாட்டு நிலையில் கூறியிருத்தல் வேண்டும். ஆனல் அவ்வாறு சொல்லாமல் பூசி மெழுகி, வழவழ, கொழகொழ என்று திட்டவட்டமின்றிக் கூறியிருத்தல் அவர் அச்சத்தையும், அதிகாரத்துக்கு அஞ்சித் தந்நலத்துக்கு ஆட்பட்ட ஒரு நெகிழ்ச்சி நிலையையுமே காட்டுகிறது. வரலாற்றுசிரியர்க்கு இக்கோழைமை நிலை தேவையில்லை. அஃதிருந்தால் வரலாற்றைத் தெளிவாகச் சொல்லமுடியாது.)

அதற்குப் பிறகு சங்க காலத்தில் முடியுடைமூவேந்தரும் இமயம் வரை படையெடுத்துச் சென்று தங்கள் இலச்சினைகளான வில், புலி, கயல், இலச்சினைகளைப் பொறித்து வந்துள்ளதாக இலக்கியங்கள் கூறுகின்றன. கி.பி. 2-ஆம் நூற்றுண்டில் தக்கணத்தை ஆட்சி புரிந்த சாதவாகன மன்னர்கள் தாம் வெளியிட்டுள்ள காசுகளில் தமிழ் எழுத்தில் தமிழ் மொழியில் தங்கள் பெயரைப் பொறித்துள்ளனர். இவை தமிழ்நாட்டுக் கலையொழுக்கங்கள் பிற பகுதிகளுக்கும் பரவியதை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன.

Scanned with CamScanner

கி.பி. 8-ஆம் நூற்றாண்டளவில் தமிழகத்திலேயே வளர்ச்சி அடைந்த கட்டிடக் கலையின் தாக்கத்தைத் தக்கணப் பீட நிலத்தை ஆட்சி செய்த சாளுக்கிய வேந்தர்களின் கலைப் பாணியில் காண முடிகிறது. எல்லோராவில் மலையைச் செதுக்கி அமைத்து இருக்கும் கைலாசநாதர் கோயில், காஞ்சிபுரத்தில் உள்ள பல்லவர் காலத்தைச் சேர்ந்த கைலாசநாதர் கோயிலை மிகவும் ஒத்துக் காணப்படுகிறது.

கி.பி. 8-ஆம் நூற்றாண்டில் இந்தியநாட்டின் தென்கோடியில் உள்ள கேரள நாட்டுச் சிற்றூர் ஆன காலடியில் பிறந்த ஆதிசங்கரர் பாரதத்தின் வடகோடி வரை சென்று தம் மதக் கருத்துப் பரப்புதலைச் செய்து மக்களை மெய்ப்பொருள் வழிக்கு அழைத்துச் சென்று இருப்பதும், அதேபோன்று தமிழ்நாட்டில் பிறந்து வளர்ந்த திருமாலியப் பெரியார் இராமநுசர் கருநாடகப் பகுதி வரை சென்று, போசள அரசன் அவையில் இருந்து தொண்டு செய்திருப்பதும், தமிழ்நாட்டுக் கலையொழுக்கம் தக்கணப் பகுதியிலும், வடநாட்டுப் பகுதியிலும் ஓங்கி வளர்ந்திருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுவனவாக உள்ளன. இது மட்டுமல்லாமல் தமிழகத்திற்கே உரியது என்று கருதப்படும் பரத நாட்டியம் நமது தாய்த்திருநாட்டில், வடகோடியில் உள்ள காசுமீர் தேசத்திலும் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்று அறிகின்ற போது தமிழ்நாட்டுக் கலையொழுக்கம் எந்த அளவுக்கு வடநாட்டில் தாக்குதலை ஏற்படுத்தியுள்ளது என்பதை எண்ணி இறுமாப்பு எய்த முடிகிறது. (இவ்விடத்தில் பரத நாட்டிய ஆராய்ச்சியில் முனைவர் பட்டம் வாங்கியுள்ள செருக்கில், பரதக்கலையே காசுமீரத்திலிருந்து தமிழர்களிடையே பரவிய கலை என்று தலைகீழாகக் கருத்தறிவித்துக் கொண்டிருக்கும் பத்மா சுப்ரமணியம் போன்றவர்களுக்கு, இக் கட்டுரையாசிரியர் போன்றவர்கள் ஏன் மறுப்பே சொல்வதில்லை என்று எண்ணிப் பார்த்து வருந்த வேண்டியிருக்கின்றதன்றோ?) 0

— நன்றி. கூரியர் அக்' 88


## "தென்மொழி" சென்னை-5.

தனித்தமிழில் வெளிவரும் உயர்ந்த இலக்கிய இதழ்.
ஒவ்வொரு தமிழ்த் திங்களும் முதல் நாளன்று வெளிவரும்.

| | | | |
|---|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் | : | உருபா | 24.00 |
| அரையாண்டுக் கட்டணம் | : | ,, | 12.00 |
| தனியிதழ் | : | ,, | 2.00 |

ஓரிதழுக்கு உருபா 4.00 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க !


Scanned with CamScanner

# கழகக் காலத்திற்குப் பின் தமிழ்மொழிக் கல்விக்கு வாய்ப்புக் குறைவும் சமசுக்கிருதக் கல்விக்கு வாய்ப்பு மிகுதியும்.

கழகக்காலத்தில் செழித்து வளர்ந்தோங்கியிருந்த கல்வி நிலை போய் கழகம் மருவிய காலத்திற்குப் பிறகு தமிழர்களுக்குக் கல்வி வாய்ப்பு அளிக்கப்படவில்லை. கி.பி. 3-ஆம் நூற்றுண்டு தொடங்கி வட இந்தியர்களின் வல்லாண்மை தமிழகத்தில் பெருகி விட்டது என்பதனைப் பல்லவர் வரலாறு, சோழர் வரலாறு, பாண்டியர் வரலாறு ஆகியன காட்டுகின்றன.

பல்லவர், சோழர், பாண்டியர் காலங்களில் தமிழ்க் கல்விக்கு வாய்ப்பே அளிக்கப் படவில்லை. மாறுக, சமசுக்கிருதம் பயில அரசர்கள் ஆயிரக்கணக்கான மானியங்களை வழங்கினர்கள் — என்று கல்வெட்டுகள் சுட்டிக் காட்டுகின்றன.

கி.பி. 345 — 370-இல் கதம்ப அரசர் மரபைத் தோற்று வித்த மயூரசன்மன் என்ற அரசன் காஞ்சியில் புகழ் பெற்றிருந்த வடமொழிக் கல்லூரியில் கல்வி பயின்ருன். அக் கல்லூரியில் நூற்றுக் கணக்கான மாணவர் சமசுக்கிருத வழிச் சாத்திரங்களைக் கற்றனர். இங்குப் பாடம் பயிற்றுவித்து வந்த தருமபாலர் என்ற பேராசிரியர் பிற்காலத்து வடநாட்டு நாளந்தா பல்கலைக் கழகப் பேராசிரியராகச் சென்ருர். இதிலிருந்து காஞ்சி வடமொழிக் கல்லூரியின் சிறப்பை அறியலாம். இதனைத்தான் அப்பரும், 'கல்வியில் கரையிலா காஞ்சி மாநகர்' என்று புகழ்ந்தார்.

நிருபதுங்கவருமன் ஆட்சிக் காலத்தில் (ஆட்சிக் காலமான கி.பி. 860-இல்) பாகூர் (கடலூர் — புதுச்சேரி) என்ற சிற்றூரில் மிகப்பெரிய சமசுக்கிருதக் கல்லூரி ஒன்று நிறுவப்பட்டது. சமசுக்கிருத வேதப் பேரறிஞர்கள் அந்தணப் பிள்ளைகளுக்கு 18 வகைக் கல்வியும் கற்றுத் தந்தனர். இவ்வாறு பல்லவர் காலத்தில் பல இடங்களில் சமசுக்கிருதக் கல்லூரிகள் அரச உதவித் தொகையுடன் நடத்தப் பெற்றன.

சோழர் காலம் தமிழர் வரலாற்றில் பொற்காலம் (என்று கருதப் பெறுகிறது. ஆனல்) கல்வியைப் பொறுத்த அளவில் தமிழர் பார்வையில் சோழர் காலம் ஓர் இருண்ட காலமே என்று கருத வேண்டி இருக்கிறது. பல்லவர் ஆட்சிக் காலத்தில் காணப்பெற்ற வடமொழி வல்லாண்மை சோழர் காலத்தில் பல்கிப் பரவியது. எண்ணுயிரம் ஊர் ஆரியப் பார்ப்பனருக்கு அளிக்கப் பெற்றுச் சதுர்வேதி மங்கலம் (நான்கு வேதங்கள் வளரும் இடம்) ஆக்கப் பெற்றது. இங்கிருந்த வடமொழிக் கல்லூரியில் 340 மாணுக்கர் கல்வி பயின்றனர். 75 மாணுக்கர் யசூர் வேதமும்,

Scanned with CamScanner

20 மாணுக்கர் சாந்தோக சாமனமும், 25 மாணுக்கர் வியாகரணமும், 40 மாணுக்கர் ரூபாவதார இலக்கணமும், 20 மாணுக்கர் அதர்வண வேதமும், பிறிதொரு 20 மூத்த மாணுக்கர் சாந்தோக சாமனும், மற்றுமோர் 20 பேர் தலவகாரசாமனும் பயின்றனர். இக் கல்வியைக் கற்பிக்க 14 வேதம் கற்ற ஆரிய ஆசிரியர்கள் அமர்த்தம் பெற்றிருந்தனர். மாணுக்கர்க்குக் கல்வி, உணவு, உறைவிடம், ஆகியன இலவயம் ஆக்கப்பெற்றன. ஆசிரியர்க்குச் சோழ அரசு ஊதியம் வழங்கிற்று. இக் கல்லூரிக்கு 300 குறுக்கம் (ஏக்கர்) நிலம் அரசால் இலவயமாக விடப்பெற்றது.

சென்னே, திருவொற்றியூர் முதல் இராசேந்திரசோழன் ஆட்சிக் காலத்தில் 340 மாணுக்கர்கள் சமசுக்கிருதம் பயில ஒரு கல்லூரியும், 190 மாணுக்கர்கள் பயிலப் பிறிதொரு கல்லூரியும், 190 மாணுக்கர்கள் பயில மூன்ருவதொரு கல்லூரியும், வியாகரணதான மண்டபம் என்னும் பாணினீய இலக்கணக் கல்லூரியும் சோழமன்னர் இராசேந்திரனுல் நன்கொடையுடன் (மானியத்துடன்) நடத்தப் பட்டன. வேப்பத்தூரிலும், திருமுக்கூடலிலும், திரிபுவனி எனும் இடத்திலும், தஞ்சாவூரிலும் இது போன்ற கல்லூரிகள் அரசு நற்கொடையுடன் சமசுக்கிருதச் சாத்திரத்திற்கென நடத்தப் பட்டன. இதில் வியப்புக்குரியது யாதெனில், தமிழ்க் கல்வி பயிற்றுவிக்க ஒரு சின்னப் பள்ளியேனும் இருந்ததாகவோ அதற்கென நற்கொடை வழங்கப்பட்டதாகவோ ஒரு கல் வெட்டுச் சான்று கூட இல்லை.

பிற்காலப் பாண்டியர் காலத்தில்
மகா பாரதம் தமிழ்ப் படுத்தியதும்
மதுரா புரி சங்கம் வைத்தும்

(சின்னமனூர்ச் செப்பேடுகள்)

என்ற குறிப்புகள் தவிர, தமிழ்க் கல்வி வைத்ததற்கான சான்றுகள் எதுவும் கிட்டவில்லை. தனிப்பட்ட முறையில் திண்ணைப் பள்ளிக்கூடங்கள் ஒரு சில ஆங்காங்கே இருந்துள்ளன. மாருக சமசுக்கிருதச் சாத்திரக் கல்லூரிகள் அரசு உதவியுடன் ஆங்காங்கே நடத்தப்பட்டன.

நாயக்கர் காலத்தில் நாயக்க மன்னர்கள் பிராமணர் கல்விக்கே முதலிடம் தந்தனர்; பொருளுதவி செய்தனர். மதுரை நகரில் 10,000 பார்ப்பனப் பிள்ளைகள் சமசுக்கிருத சாத்திரம் கற்றதாக டி. நொபிலி குறிப்பிடுகிருர். கி.பி. 1610-இல் டி. நொபிலி எழுதிய கடிதத்தில் பிராமணர்கள் பெற்ற இத் தனிச் சலுகை பற்றி அவர் பின் வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

''In Madura there are more than *10,000* students distributed in different classes of two to hree hundred — these students are all Brahmins.''

— Wolfied Noeble 'Dravidian Studies — A Review' *1986*

நாயக்கர் காலத்தில் தமிழ் பெற்றிருந்த அவல நிலையைப் பின் வரும் பகுதி தெளிவுப்படுத்தும்.

Scanned with CamScanner

''பொது மக்கள் கல்வியைக் குறித்துக் கவலைப்பட்டதில்லை; அக்கறை காட்டியதுமில்லை. மதுரை நாயக்கர்களும் பொதுமக்கள் கல்வியைப் பற்றிப் பெரும்பாலும் கவலைப்பட்டதுமில்லை — தெலுங்கர்களாய் இருந்ததால் அவர்களுக்குத் தமிழ்வளர்ச்சியைக் குறித்து ஆர்வம் உண்டாகவில்லை, பற்றும் தோன்றவில்லை ... பார்ப்பனர்களுக்குச் சமயக்கல்வி அமைப்பதே நாயக்கர்களுக்கு நோக்கமாக இருந்தது. (படிக்கும் பார்ப்பனப் பிள்ளைகளுக்கு) உணவு, உடை முதலியவை கொடுப்பதற்கும், கல்வி கற்பித்த ஆசிரியர்க்கு ஊதியம் தருவதற்கும் விசய நகர ஆட்சியாளரும் மதுரைப் பெரு வேந்தரும் வழிவகை செய்திருந்தார்கள்.'' — மதுரை நாயக்கர் வரலாறு — அ.கி. பரந்தாமனார்.

ஐரோப்பியர் வரவு வரை, கல்வி என்பது சமசுக்கிருதச் சாத்திரக் கல்வியாகவும், அது பிராமணர்க்கே உரியது ஆகவும் அனைத்து அரசர்களாலும் சமசுக்கிருதக் கல்விச் சாலைகள் நடத்தப்பட்டன. வேதங்களைத் தமிழர்கள் படிக்கலாகாது என்று த்டுக்கப்பட்டிருந்தனர்.

அரச குடும்பத்தைச் சார்ந்தவர்கள் கல்வி கற்றனர். அது போரியல் கல்வி மட்டுமே. அந்தணர், அரசர் என்ற இருவரைத் தவிர ஏனையோர்க்கு எத்தகு பொதுக் கல்வியும் வழங்கப்படவே இல்லை.

தமிழ்நாட்டில் திண்ணைப் பள்ளிக் கூடங்கள் இருந்தன. அவற்றில் வசதி படைத்த வீட்டார் பிள்ளைகள் தனிப்பட்ட முறையில் ஓரளவு கல்வி கற்று வந்தனர். அவ்வளவுதான். இது பொதுக் கல்வியுமன்று; பொதுமக்கள் கல்வியும் அன்று.

பெரும்பான்மையாக இருந்த பார்ப்பனர் அல்லாதார் கல்வி கற்கத் தடையிடப்பட்டிருந்தனர் என்பதைக் கர்ணன், ஏகலைவன் ஆகியோரின் இதிகாச வரலாறுகள் குறிப்பாக உணர்த்துகின்றன. அந்த இரண்டு நிகழ்ச்சிகளும் அன்றைய பார்ப்பனர்கள், ஏனைய பார்ப்பனர் அல்லாதார் எதுவும் கற்கக் கூடாது என்பதில் எத்துணை அக்கறையோடு இருந்தார்கள் என்பதைக் காட்டுகின்றன. வேதக்கல்வியை ஏனையோர் கற்கக் கூடாது என்று தடையிட்டதன் மூலமும், நாட்டில் வேதக் கல்வி நிலையங்களை மட்டுமே நிலை நிறுத்தியதன் மூலமும், சூத்திரர் கல்வி கற்கும் வாய்ப்பு முற்றுகத் தடுக்கப்பட்டது. இதன் விளைவாகவே ஐரோப்பியக் கல்வி இரண்டு நூற்றுண்டுகள் இருந்த பின்னும் கூடத் தமிழர்களில் படிக்காதோர் தொகை கி.பி. 1947-இல் 90 விழுக்காடாக இருக்க நேர்ந்தது. ஒண்டவந்த ஐரோப்பியரிடம் கல்வியறிவில்லாத இவ்வேழை மக்கள் எளிதாக அடிமையுறவும் நேர்ந்தது. ஆரியர்தம் பண்பாட்டுப் படையெடுப்பால் சீரழிந்த தமிழர் வாழ்வுக் கூறுகளுள் அவர் கல்வி பெறுமல் போனது தலையாய துயரமாகும். அவர்தம் அனைத்துத் துயரங்களுக்கும் அடிப்படையாக இருந்தது, அவர் கல்வி பெறுமல் இருந்ததே ஆகும்.

Scanned with CamScanner

கழகக் காலத்திலும், கழகம் பரவிய காலத்திலும் சிறக்கக் கற்க வாய்ப்புப் பெற்றிருந்த தமிழர் பிற்கால ஆரிய வரவால் கல்வி கற்கும் ஆர்வத்தை ஏன் அழித்துக் கொள்ள வேண்டும் என்ற வினு எழும். அவ்வினு முறையானதே! தமிழர் முற்றும் முழுதுமாகக் கற்காமல் இல்லை என்பதைத் திண்ணைப் பள்ளிக் கூடம் பற்றிய செய்திகள், தமிழிலக்கியங்களில் இடம் பெற்றுள்ள கல்வியைப் பற்றிய புகழுரைகள் பெரும்பாண்மைக் கல்வி பெருத இக் குமுகத்திலும் எழுதப் பெற்ற இலக்கியங்கள் காட்டுகின்றன. இக் கல்வி பொதுக்கல்வியாகவும், பொதுமக்கள் கல்வியாகவும் வளர்ச்சிபெற வில்லை; ஏதோ சிறுபான்மையோர் கல்வியாக ஒதுக்கி இருந்தது அவ்வளவுதான்.

பொதுமக்களின் திண்ணைப் பள்ளிக்கூடக் கல்வி எவ்வளவு தரத்தோடு இருந்தது என்பதற்கு ஒரு பெருஞ்சரியான சான்று, இக்கால இடைவெளியில் கோயில் சுவர்களில் கல்தச்சர்களால் வெட்டப்பட்ட கல்வெட்டு மொழிகளே ஆகும். அவற்றில் உள்ள ஒருசொல் கூடப் பிழையற வெட்டப்படாத ஓர் இரங்கல் நிலையைப் பார்த்தால் இடைக்காலத் தமிழர்தம் கல்வித்தரம் தெளிவாகும்.

தமிழருக்கு அருமையான நெறிகளைப் புகட்டும் திருக்குறள் போன்ற அறநூல்கள் தமிழர்களிடம் பரவாமைக்கும் பெரும்பான்மைத் தமிழர் பின்பற்ருமல் போனமைக்கும் மூலகாரணம் பெரும்பாலோர் கல்வியறிவற்றிருந்தது தான் காரணம். இந்நூல்கள் அறிஞர்தம் அவைகளில் படிக்கப் பெற்றன; பாராட்டப் பெற்றன. ஆனுல் பொதுமக்களிடையில் போய்ச் சேரவே இல்லை. அதற்கு மூல முதற்காரணம் பெரும்பான்மைத் தமிழர் கல்வி பெருமை. அதற்கு மூல முதற் காரணம் தமிழகம் வந்த ஆரியர் தமிழர் கல்வி பெருமல் தடுத்தமையாகும்.

கழகக் காலத்திலும் கழகம் மருவிய காலத்திலும் கற்ற தமிழர் பிற்காலத்துக் கற்காமல் போனமைக்குக் காரணம் ஆரியர் தம் வரவும் உறவும். இவ்வாறு வேறு நாட்டில் நிகழ்ந்தது உண்டா? நிகழ்ந்தது உண்டு. கிரேக்கர்கள் சிறந்த கல்வி ஆர்வலர்; விடுதலை விரும்பிகள். அயல் நாட்டு வல்லாளுமையால் தம் கல்வியறிவை இழந்திருந்தனர் என்பதை ஓமர் (Homar) காலத்திற்கு முற்பட்ட கிரேக்கர் வரலாறு காட்டுகிறது. கற்ற தமிழர் கல்லாத தமிழராகப் போனதற்குக் காரணம் ஆரியப் பண்பாட்டின் படையெடுப்பே! படையெடுப்பே! —பேரா. க. ப. அறவாணன்.
(நூல் : தமிழர் மேல் நிகழ்ந்த பண்பாட்டுப் படையெடுப்புகள்.

---

## அன்பர்கள் கவனிக்க!

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள் கட்டாயம் வெள்ளி, காரி ஆகிய நாள்களில் மாலை 5 மணிக்கு மேல், எழுதி இசைவு பெற்றுக் கேட்டுக்கொண்டு வருமாறு வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம். — அமைச்சர்

Scanned with CamScanner

முன்னிதழ்த் தொடர்ச்சி : தொடர் : 3

# தமிழர் வாழ்வில் தாலி தேவையா?

- திருவாட்டி: திருமுல்லை. கோலாலம்பூர்.

தனக்குச் செய்யப்பட்டதையெல்லாம் நினைவிற்கொண்டு வேண்டுமானால் பிறர் மெச்ச இன்னும் கொஞ்சம் கூட்டிச் சொல்லித் தன் அறிவை வெளிப்படுத்திப் பெருமைப் படுவாள்.

அந்தச் சடங்கோடு பெண்ணின் இன்ப வாழ்வு முடிந்தது. இனி அவள் ஒரு நடைப்பிணம். 'பீடை;' முண்டச்சி; தாலி அறுத்தவள். மனைவியை இழந்த எந்த ஆணாவது இக்கொடுமைக்கு ஆளாவதுண்டா?

இதனால்தான் சமஉரிமைக்காகப் பாடுபடும் நாங்கள் தாலியைக் கட்ட வேண்டாம் அறுத்தெறியவும் வேண்டாம் என்கின்றோம்.

ஒரு பெண் தாலியறுக்கும் போது இரக்கம் (பாவம்) என்று வாயால் கூறி மனத்தால் உணரமுடியாத பெண் பிறவிகளே! இதே நிலை மற்றவருக்கு வராது என்ற நினைப்பு ஏன்?

முன் காலத்தில் கைம்பெண்களுக்கு மிகுந்த கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டன. பூதப்பாண்டியன் என்ற அரசன் தேவி, புலவர் தடுத்தும் கேளாமல், இந்தக் கட்டுப்பாடுகளுக்கு அஞ்சியே தீப் பாய்ந்து உயிர் விட்டாள். தற்காலத்தில் அக்கொடுமைகள் குறைந்து விட்டன. குறைப்பது நமது குறிக்கோள் அன்று. கூடாது என்பதே நமது கொள்கை.

சூழ்ச்சி :

கட்டிய தாலியைக் கழற்றக் கூடாது என சில மேதைகள் சொல்லுவார்கள். புதிய வழக்கங்கள் (சம்பிரதாயம்) படைக்கப் போகிறோம் என்ற நினைப்பு.

சடங்கு வழக்கங்கள்படி கட்டப்பட்ட தாலியை எந்தச்சடங்கு வழக்கங்கள்படி கழற்றாமல் இருப்பது? வழக்கங்கள் என்றால் அவை கடைபிடிக்கப்பட வேண்டும். கடைப்பிடிக்காவிட்டால் பிறகு என்னவாகும்? தாலி கட்டாமல் இருந்தாலோ, கணவன் உயிருடன் இருக்கும் போதே கழற்றினாலோ தீமை வரும் — என்று கூறுபவர்களுக்குக் கணவன் இறந்த பின் கழற்றாமல் இருந்தால் மட்டும் தீமை வராதா?

பணக்காரர்களுக்குத் தாழ்வில்லை. அவர்களுக்கு எத்தனையோ வசதிகள் மனம் போல் கிடைக்கும். ஆனால் ஏழைப் பெண்களின் வாழ்வுக்குத் துணை யார்? தாலியைக் கழற்றாது திரிந்தால் இவள் இறந்துவிட்ட கணவன் பேரில் மிகுந்த அன்புகொண்டுள்ளாள் என்று நினைத்து எந்த ஆணும் பெருந்தன்மையோடு வாழ்வளிக்க முன்வருவானா?

இந்தக் கருத்தெல்லாம் பெண்களை மீண்டும் இருட்டறையில் தள்ள குள்ளநரிகள் செய்யும் சூழ்ச்சியே.

Scanned with CamScanner

# செய்திகள்!

(கடந்த இதழ்களில் அவ்வப்போது வெளிவந்திருக்க வேண்டிய செய்திகள் பல்வேறு காரணங்களால் இங்கு ஒட்டுமொத்தமாக வெளியிடப் பெறுகின்றன.)

## 1. மு. மாறன் -- பைங்கொடி -- திருமண விழா :

கடந்த ஆடவை (ஆனி)த் திங்கள் 13-ஆம் நாள் (27-6-88) திங்கட்கிழமை காலை 9 மணியளவில், சென்னை, தியாகராயநகர், இராதாகிருட்டிணன் தெருவிலுள்ள அலர்மேல் மங்கை, திருமண மண்டபத்தில், திருக்கழுக்குன்றம், தேசுமுகிப்பேட்டை, காலஞ் சென்ற கோ. முத்துப்பெருமாள் அவர்களின் மகன் செல்வன் மு. மாறன் பொறி. இ. அவர்களுக்கும், சென்னை, திருவல்லிக் கேணி இ. துரைராசு பொறி. இ. அவர்களின் மகள் செல்வி. பைங்கொடி என்னும் து. இலதாவுக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் இல்வாழ்க்கை ஏற்பு விழா நடைபெற்றது.

---

முடிவுரை : (முன் பக்கத் தொடர்ச்சி)

தாலி வேண்டும் என்று அடம் பிடிப்பவர்கள் ஆண்கள் அல்லர். அவர்கள் பெருந்தன்மையானவர்கள். அவர்களிடம் கேளுங்கள் 'மாங்கல்யம் அணிந்த பெரும் பேயைவிட — தாலியணியாத தரும தேவதை இருந்தால் சொல்லுங்கள்' என்பர். தாலியை அணிந்து கொண்டு தடியால் அடிப்பதைவிட — தணியாத அன்பால் துணைவரை வாழ்விக்கலாம்.

மணவாழ்விற்குத் தாலி இன்றியமையாதது அன்று. இதை அனைவரும் உணர்ந்தே இருப்பீர்கள். இருப்பினும் அச்சமும் — அதைவிட விடாப்பிடித்தன்மையுமே நம்மை பின்தங்க வைத்துள்ளது என்பதை உணரவேண்டும். — உலகில் முன்னேறிய பெண் இனம் யாவும் தாலி கட்டிக்கொண்ட பெண் இனமன்று என்பதை நினைவிற்கொள்ளுங்கள்.

பண்பாடு என்பது நமக்கு நன்மை செய்யவே இருக்க வேண்டுமே அல்லாமல் துன்பத்திற்கன்று.

நமது நல்வாழ்விற்குத் தடையாக இருந்தால் அது பண்பாடாக இருந்தாலும் சரி, எதுவாக இருந்தாலும் சரி, அதை அகற்றிப் புதிய பண்பாட்டைப் படைப்பதில், புதிய வழிமுறையைக் காணுவதில் தவறேது?

நமது பழம் பண்பாட்டைக் கைவிட்டதால்தானே இந்த 'மாங்கல்யம்' நம்மோடு ஒட்டிக்கொண்டுள்ளது. நம் முன்னோர்கள் மூடர்கள் அல்லரென்றால் — அவர்கள் வழி நாமும் தாலியை அகற்றிவிடுவதால் தவறென்ன?

அறிவுக்குப் புறம்பாக இடைக்காலத்தில், ஆரியர்களால் நம் மீது திணிக்கப்பட்ட பண்பாட்டை — வழக்கத்தைக் கட்டி அழுவது ஏன்? நாங்கள் உண்மையைக் கூறுகிறோம். உணரவேண்டியதும், பயனை அடைய வேண்டியதும் நீங்களே. சிந்தித்துச் செயல் படுங்கள்.

(முற்றும்)

Scanned with CamScanner

தொடக்கத்தில் திருக்கழுக்குன்றம் பேரூராட்சித் தலைவரும், தி.மு.க. பொதுக்குழு உறுப்பினருமாகிய திரு. வீ. தமிழ்மணி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அடுத்து, மணவிழாத் தலைவர் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தமிழ்த் திருமண நோக்கங்கள், கொள்கைகள், நடைமுறைகள் ஆகியவற்றை விளக்கியும், இல்லற வாழ்வியல் சிறப்பு நிலைகளை இலக்கியச் சான்றுகளுடன் எடுத்துக் கூறியும், முன்னுரை மொழிந்து திரு-மண நிகழ்வை நடத்தி வைத்தார்.

அதன் பின்னர், மணக்களை வாழ்த்தி திருவாளர்கள்: சோ. சண்முகம் (திருக்கழுக்குன்றம் தி.மு.க. ஒன்றியச் செயலா-ளர், புலவர். சி. சண்முகம் க.மு;கல்.இ; புலவர் சி. இரகுபதி. க.மு; கல்.இ; மு.வே. கங்காதரன் க.மு;கல்.மு. ஆகியோர் நல்லுரை வழங்கினர். இறுதியில் திரு. து. துரைராசு (மேலா-ளர், அசோக் இலேலண்டு, ஓசூர்) அவர்களின் நன்றியுரைக்குப் பின், விழா இனிதே நிறைவுற்றது.

## 2- இரா. அப்பாத்துரை -- விசயகுமாரி -- திருமண விழா:

சென்ற ஆடவை 27 (11-7-88)ஆம் பக்கல், தஞ்சை யாகப்பா தங்கும் விடுதியில் உள்ள அன்னை திருமண மண்டபத்தில், திருவாளர் கோ. இராசப்பன் — மாசிலாமணி இணையர் மகன், செல்வன் இரா. அப்பாத்துரைக்கும், கருக்காடிபட்டி ந. விசுவ-லிங்கம்—சொர்ணம் இணையரின் மகள் செல்வி. விசயகுமாரிக்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள் தலைமையில் திருமண விழா சிறப்புற நடைப்பெற்றது. தலைவரவர்கள் முன்னுரையும் கருத்துரையும் வழங்கி மணவிழா நிகழ்ச்சியை நிறைவுற நடத்திய பின்னர், திருவாளர்கள் கருக்காடிபட்டி ஊராட்சி மன்றத் தலை-வர் அ. சிங்காரவேலு, திருமணிக்குன்றன், (இரத்தின கிரி), மணிவண்ணன், கு. சாமியையன், த. தமிழ்த்தென்றல் ஆகி-யோர் மணமக்களை வாழ்த்தி நல்லுரை வழங்கினர். இறுதியில் பெ. இராசேந்திரன் நன்றியுரை செய்தார். மணவிழா இனிதே நிறைவுற்றது.

## 3. கொற்கைத் தமிழ் மன்றம் -- ஏரல்:

## 11 ஆம் ஆண்டு நிறைவு விழா:

சென்ற 31-8-88 அறிவன் மாலை 7 மணியளவில், வ.உ.சி. மாவட்டம், ஏரல், சிறுத்தொண்ட நல்லூரில் உள்ள வள்ளுவர் கோட்டத்தில் கொற்கைத் தமிழ் மன்றத்தின் 11-ஆம் ஆண்டு நிறைவு விழா, ஊர்மக்கள் புடைசூழ, அறிஞர்கள் வாழ்த் தெடுப்ப, தமிழ் மன்றப் புலவோர்கள் தலைவர் ச. சிவசங்கும், செயலர் க. ஐயாத்துரையும் மகிழ்வும் வியப்பும் எய்த, வள்ளுவர் கோட்ட மாணவியரின் இறைவணக்கப் பாடலுடன் இனிதே தொடங்கியது. வரவேற்புரையை மன்றத் தலைவர் புலவர் ச. சிவசங்கு அவர்கள் நிகழ்த்த, செயலர் புலவர் க. ஐயாத்துரை அவர்கள் ஆண்டறிக்கை படிக்க, சென்னை, வேந்தன் இரும்பு

Scanned with CamScanner

அங்காடி உரிமையாளர் சி. புகழ்வேந்தன் தலைமையில் திரு-வாளர்கள் மதிசூடி, இராபர்ட் சோழன், மணிமொழிச்செல்வன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். அதன் பின் புகழ்வேந்தன் அவர்களின் மகள் செல்வி. புகழ். ஔவைக்கனியின் நாட்டிய நிகழ்ச்சி நடைபெற்றது.

அதன் பின் 'திருவள்ளுவரோடு இனிய சந்திப்பு' என்னும் நிகழ்ச்சி நடைபெற்றது. திருவள்ளுவராக, புலவர் திரு. பழனி கிருட்டிணன் க.மு. அவர்கள் வீற்றிருக்க, புலவர் வீ. செந்தில் நாயகம் க.மு. இளங்கோவடிகளாகவும், புலவர் இ.மா. கணபதி க.மு. அவர்கள் கம்பராகவும், புலவர் தமிழ்மாறன் அவர்கள் பாவேந்தராகவும், திருவள்ளுவரிடம் உரையாடல் நிகழ்த்தினர். இந்நிகழ்ச்சியும், புலவர்களின் உரையாடலும் வந்திருந்தோரின் கண்களையும் கருத்தையும் ஒருங்கே கவர்ந்திழுத்து மகிழ்வூட்டின.

வள்ளுவர் கோட்டத்தின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிக்கு, திரு. நு. வில்சன் வெள்ளையா க.இ. தலைமை தாங்க, திருவாளர்கள் ச. பே. முத்து. (பெருந்தலைவர் திருவை ஊராட்சி ஒன்றி-யம்), கி. சொ. முத்து (வேளாண்குரிசில் — ஏரல்), இல. சுந்தரம் (செயலர். கொற்கைச் சுற்றுலா வளர்ச்சி மன்றம், மங்கலக் குறிச்சி) ஆகியோர் வாழ்த்துரை வழங்க, செல்வி. அவ்வைக் கனியின் நாட்டியமும் நடந்தது.

பின்னர், இரண்டாம் நாள் இறுதி நிகழ்ச்சியாக 'தமிழ் உணர்வு மழுங்கவில்லை' என்னுந்தலைப்பில் புலவர் திரு. தமிழ் மாறன் அவர்களும், 'வள்ளுவர் நோக்கில் மெய்ப்பொருள் உணர்வு' என்னும் தலைப்பில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களும் சிந்தனையுரையாற்றி, விழாவை நிறைவு செய்தனர்.

விழாக்களின் இறுதி நிகழ்ச்சியாகப் புலவர் திரு. அரச தேவநேயன் க.மு. நன்றியுரை பகன்றார்.

விழாக்களுக்கு மூல முதல்வராக இருந்து செயல்பட்ட புலவர் திரு. சிவசங்கு அவர்களை அனைத்துப் பொதுமக்களும் அறிஞர் பெருமக்களும் வாயாரப் பாராட்டி நெஞ்சார வாழ்த்திச் சென்றனர்.

### 4. குறும்பூர் -- பொதுக்கூட்டம் :

சென்ற 2-9-88 வெள்ளிக்கிழமை மாலை 7 மணியளவில், அங்க மங்கலம் இரா. சண்முகனார் நினைவு நூலக வளர்ச்சிக் குழுவின் சார்பில், குறும்பூர் (நெல்லை) தந்தை பெரியார் படிப்பகம் முன் உள்ள பாவாணர் அரங்க மேடையில்; திரு. க. செயராமன் தலைமையில் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்கள், 'இன்றைய தமிழ்நாடும் தமிழர்களும்' என்னுந் தலைப்பில் சிறப்புச் சொற் பொழிவு ஆற்றினார். தொடக்கத்தில் குறும்பூர் சீ. மலர்வேந்தன் வரவேற்புரையாற்றினார். அவரையடுத்து, ந. பேச்சிமுத்து, ஏரல் புலவர் சிவசங்கு, அம்மன்புறம் புலவர். வே. தமிழ்மாறன் ஆகியோர் கருத்துரை ஆற்றினர். இறுதியில் நாசரேத்து குளா

செல்ல அரசு நன்றி கூறினர். நிகழ்ச்சி இரவு 12 மணியளவில் நிறைவுற்றது.

## 5. பஞ்சமணி -- சி. செல்வநாயகி -- இணையர் வாழ்க :

கடந்த கன்னி 16 (2-10-88) ஞாயிறு, மாலை 5-30 மணியளவில், தங்கவயல், சாம்பியன் ரீப், தூய மரியன்னை கலை மன்றத்தில், மறைந்த மாரிக்குப்பம் பெருமாள் — முனி கண்ணம்மாள் அவர்களின் இளைய மகனும், உரத்த தென்மொழியன்பரும் ஆகிய பெ. பஞ்சமணிக்கும், த. சின்னத்துரை — கண்ணம்மாள் அவர்களின் மூத்த மகள் சி. செல்வநாயகிக்கும், பாவலரேறு பெருஞ்சித்திரனார் தலைமையில் திருமணம் இனிதே நிறைவுற்றது.

தொடக்கத்தில் திரு. கோவிந்தன் தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடினர். திரு. கோவிந்தசாமி வரவேற்புரை யாற்றினர். அதன் பின்னர் தலைவரவர்கள் திருமண நிகழ்ச்சியை நடத்தி வைத்தார். அதனையடுத்து மருத்துவர் தினகரன், தென்னவன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இறுதியில் மணமகன் பெ. பஞ்சமணி நன்றியுரை கூறிட இனிய விருந்துக்குப் பின் மணவிழா நிகழ்ச்சி இனிது நிறைவுற்றது.

## 6, சி. வேலவன் அறி. இ. வே. மீரா -- மணவிழா :

சென்ற துலை (ஐப்பசி)த் திங்கள் 26 (11-11-88)ஆம் பக்கல் வெள்ளிக்கிழமை காலை 10 மணியளவில், தெ.ஆ. மாவட்டம். திட்டக்குடி, புதுவீதியில் உள்ள மணமகன் இல்லத்தில் புலவர் திரு. பொ. வேங்கடாசலம். இலக்.இ. — உருக்குமணி இணையரின் மகள் செல்வி. வே மீராவுக்கும், திட்டக்குடி, தி. கொ. சிங்காரம் — மீனாட்சி இணையரின் மகன் செல்வன் சி. வேலவன் அறி.இ.க்கும், பாவலரேறு. பெருஞ்சித்திரனார் தலைமையில் திருமண விழா நிகழ்ச்சி மிகவும் சீரும் சிறப்புமாய் நடைபெற்றது.

திருமண விழா நிகழ்ச்சிக்குத் திட்டக்குடி த. கூ. வீ. சங்கத் தலைவர் திரு. பொ. வைத்தியநாதன் அவர்களும், முன்னாள் பேரூராட்சி மன்றத் துணைத்தலைவர் திரு. பெ. தங்கராசு பி.ஏ. அவர்களும், முன்னிலை தாங்கினர்.

தொடக்கத்தில் பேரூராட்சி மன்றத் தலைவர் தி. பொ. சுப்பிரமணியம் அவர்கள் வரவேற்புரையாற்றினர். பின்னர் மண விழாத் தலைவர் அவர்கள் தலைமையுரையாற்றி மணவிழா நிகழ்வை நிறைவுற ஆற்றி முடித்தார்.

பின்னர் மணமக்களை வாழ்த்தி, திருவாளர்கள். தி. பி. தங்கராசு, ஆவினன்குடி, புலவர். துரை. பாண்டியன், வை. பி. பழனியாண்டி, புலவர். பொன்னம்பலம், திருமுதுகுன்றம் வழக்கறிஞர். இரா. சோமசுந்தரம், சின்னசேலம் அம்பாயிரம், நல்லாசிரியர் முத்து. அண்ணாமலை, வழக்கறிஞர் திருவரசு, சிவநேசன். போ. ஆகியோர் உரை நிகழ்த்தினர். இறுதியில் சென்னை, பூ. இளங்கோவன் அவர்கள் நன்றி நவில, விழா இனிது நிறைவுற்றது.

Scanned with CamScanner

# செயலும் செயல் திறனும்.

-- இல. க. இரத்தினவேல்

(பாவலரேறு அவர்களின் 'செயலும் செயல் திறனும்' நூல் வெளியீட்டு விழா கடந்த 19-3-88 அன்று, சென்னை, தேவநேயப் பாவாணர் நடுவண் நூலரங்கில் உயர் நெறி மன்ற வழக்கறிஞரும், 'செந்தமிழ் நூல் வெளியீட்டுக் குழு'த் தலைவரும் ஆகிய திரு நா. நல்லப்பன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அவ்விழாவில் நூலை மதிப்பிட்டு அறிஞர் பலர் உரையாற்றினர்கள். அவ்வுரைகளில் ஒன்று இது. பிறரின் திறனாய்வுரைகளும் அவ்வப் பொழுது வெளியிடப்பெறும்.)

3. எடுத்துக்காட்டுகள்:

இயற்கையறிவியல், குமுக அறிவியல் என்ற இரண்டிலும் செயலும் செயல்திறனும் மிக்க இரு பெரியாரை எடுத்துக் காட்டுகளாகக் கருதலாம்.

கண்டுபிடிப்பு எண்ணிக்கையில் தலையாயவர் ஆன புதுப்புனைவாளர் தாமசு ஆல்வா எடிசன். 'வெற்றிக்கு உணர்வூக்கம் ஒரு பங்குதான்; உழைப்பே 99 பங்கு' என்ற பொன்மொழியைத் தந்து அதற்கு இலக்கியமாக வாழ்ந்தவர். எண்ணெய் இல்லை என்றால் விளக்கே இல்லை என்றிருந்த காலத்தில், எண்ணெய் இல்லாமல் எரியும் விளக்கை ஓராண்டில் உருவாக்குவதாகச் சூள் உரைத்தார், எடிசன். "எண்ணெய் இல்லாமல் விளக்கு எரியுமா? இவன் கிறுக்கன்" என்றனர் பலர். 'மென்லோப் பூங்காவின் பிசாசு' ஆன எடிசன் அப்படி ஒரு விளக்கைக் கண்டு பிடித்து விட்டால் தங்கள் வணிகம் படுத்துவிடும்; பேரிழப்பு ஏற்படும் என்று அஞ்சிய எண்ணெய் வணிகர்கள், எடிசனுக்கு எதிராக எல்லாவகைக் கருத்துப் பரப்புதல்களிலும் ஈடுபட்டனர். இதனால் துவளாத எடிசன், மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண்துஞ்சாது, எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளாது, அருமையும் பாராது அவமதிப்பும் கொள்ளாது கருமமே கண்ணாயினர். உலகின் பல மூலைகளில் இருந்தும், பல்வகை எரிபொருள் மூலங்களைத் தருவித்து, கரியிழையாக்கி மின்னோட்டத்தைப் பாய்ச்சி ஒளியை உருவாக்கினர். யாவும் உடனுக்குடன் தீய்ந்து போயின; தொடர்ந்த முயற்சியின் இறுதியில் ஆசுத்திரேலியாவில் இருந்து தருவித்த மூங்கிலின் கரியிழை சில மணி நேரம் ஒளியூட்டியது. இதனால் உவகை கொண்ட எடிசன் நீடித்து எரியும் மின்குமிழ்களை உருவாக்கினர். ஒன்பதாவது மாதத்தில் மென்லோப் பூங்காவுக்கு அழைக்கப்பட்ட செய்தியாளர்கள், வாயிலில் இருந்து ஆய்வகத்துக்குச் செல்லும் வழிநெடுக எண்ணெய் இல்லாது எரியும் மின்விளக்குத் தோரணங்களைக் கண்டு வியந்தனர்.

இனி, குமுக அறிவியலில் ஒருவரைக் காண்போம். பேராசான் மார்க்சின் கொள்கைகள் வெறும் மெய்ப்பொருளே எனக்

கருதிய காலத்தில், அது நடைமுறைக்கு உகந்தது என நிலை நாட்டிய உருசியப் புரட்சியின் மூலவர் இலெனின். புரட்சிக்கு இலெனின் தேர்ந்த காலமும், இடமும், விரைந்த வினைப்பாடுந் தாம் வெற்றியை ஈட்டின. சிறிது முன்பின்னாக இருந்திருப் பினும் நிலைமை மாறியிருக்கும் என்பர்.

எடிசனின் எண்ணெய் இல்லாமல் எரியும் விளக்குக்கான உழைப்பையும், இலெனினின் புரட்சி நடைமுறையையும் ஆழக் கற்போர் செயலும் செயல்திறனும் எவ்வளவு இன்றியமையா-தன என்பதை உணர்வர். அறிவியல் கூறுகளை இத்துடன் நிறுத் திக் கொள்வோம்.

4. பிற செய்திகள்:

'பொதுவுடைமை உணர்வைத் தோற்றுவிப்பது பொதுமை யுணர்வே. எனவே பொதுமை உணர்வு பொதுவுடைமை உணர்வை விடச் சிறந்ததாகும்' என ஆசிரியர் பகுத்து உரைக் கிறார்.

இலெனின் கால உருசியாவிலும், மாவோகாலச் சீனாவிலும் மாந்த நேயக் கூறுபாடுகள் விஞ்சி, ஒருவருக்கு ஒருவர் அன்பு செலுத்திக் குமுகாயத்தை வளர்த்தெடுக்கும் கோட்பாடே தலை-யாயதாய் நிலவியது. அங்கு உரிமை கிடையாது என முதலா-ளிய நாட்டு ஆளும் குழுக்கள் வாய்ப்பறை கொட்டுகின்றன. இவர்கள் விருப்பம்போல் சுரண்டும் உரிமை கிடையாதுதான் ஆனால் மாந்தநேய ஒருமைப்பாட்டுடன், மாந்தநலத்துக்கான அனைத்து உண்மை உரிமைகளுடனேயே அவர்கள் வாழ்ந்தனர்.

முதலாளிய நாடுகளிலும், நமது நாடு போன்ற அரைவேக் காட்டு நாடுகளிலும், கொத்தடிமைகளையும் குழந்தை உழைப்பு அடிமைகளையும் கொண்டு, பரந்து பட்ட உழைக்கும் மக்களைச் சுரண்டி, வளரும் குழந்தைகளைப் பாழ்படுத்தும் தன்மை நீடித்து வருகிறது. எனவே 'விலங்குகளைக் கட்டியாளுவது போல் மக்கள் கட்டியாளப் பெறுதல்' இந்த நாடுகளுக்கே பொருந்தும்.

''மக்கள் நலத்தையே முதன்மையாய்க் கொண்ட ஒருவரது, பணியின் பயன் 70% மக்களுக்கு ஆக்கமாக — அவர், அறியாது 30% மாறாக இருப்பினும் கூட — அவரை மக்களுக்கு உரியவரா-கவே கணிக்கவேண்டும்'' என்று தலைவர் மாவோ கூறினார். 'நன்மையும் தீமையும் நாடி நலம்புரிந்த தன்மை' இதுவல்லவா! எனவே இன்றைய்ப் போலிப் பொதுவுடைமையரைக் கருதாது, மெய்ம்மைப் பொதுவுடைமையருக்கு இக்கருத்துகளைப் பொருத் திக் கொள்ள வேண்டும்.

5. நூலின் பதிப்பு

நூலின் அச்சும் அமைப்பும் நன்றாக உள்ளன. நூல் நெடுக லை, ளை, ணை, னை போன்ற பழந்தமிழ் எழுத்து வடிவங்-களைப் பயன்படுத்தியமையறிந்து நாம் மகிழ்கிறோம். தென் மொழி, தமிழ்ச்சிட்டு, 'தமிழ்நில'த்திலும் இவ்வாறே பயன் படுத்த வேண்டும் என்பது நமது வேணவா.

Scanned with CamScanner

மறுஅச்சீட்டில் தவிர்க்க வேண்டிய சில குறைகள் ஆவன. (1) சில அச்சுப்பிழைகள் (2) அச்சு வகைப்பாடு!

தலைப்பு, உள்தலைப்பு முதலியவற்றைப் பாகுபடுத்தாமை. வெவ்வேறுவகை எழுத்தை அவற்றுக்குப் பயன்படுத்தாமை. எ—டு ப.176—177 (3) தலைப்பு எழுத்துகள் இடத்துக்கு இடம் மாறுபட்டு வருதல்.

கருத்து வளம் மிக்க நூலின் வெளியீட்டுப் பாங்கும் சிறந்திருக்க வேண்டும் அல்லவா!

6. முடிவுரை

உரிமைச் சிலையை நிலைநாட்டுவதுடன் நிறைவுபெறும் நூலின் இறைச்சிப் பொருள் தமிழ்த்தேசிய இனத்தின் விடுதலையே!

உலகமே ஒரு நாடக அரங்கம் என ''விழைந்தவாறே'' (As You like It) நாடகத்தில் சேக்சுபியர் மாந்தனின் எழுபருவத் திருக்கூத்தை விளக்குகிறார். குழந்தைமை, இளந்தை, இளமை, வாலை, நடுமை, முன்முதுமை, பின்முதுமை (97) என்ற எழுபருவத்தினரையும் செயலிலும் செயல்திறனிலும் ஊக்கவல்லது, இந்நூல்! 0

---

(16-ஆம் பக்கத் தொடர்ச்சி)

அனல் மின் நிலையங்களும் உலகிற்குக் கடும் அச்சுறுத்தலை ஏற்படுத்துகின்றன. ஏனெனில் அவை காற்றைத் தூய்மையின்மை ஆக்குகின்றன. கோடிக் கணக்கான பேருந்துகள், ஊர்திகளோடு கூட அவை கரிவளியை வெளியிடுகின்றன. அது வளிமண்டலத்தின் மேலடுக்குகளுக்கு உயர்ந்து, ஒளி ஊடுருவிச் செல்ல வல்ல போர்வையாக அமைந்து விடுகிறது. அது கதிரவன் ஒளியைச் செல்ல விடுகிறது. ஆனால் அனல் கதிரியக்கத்தை அப்படியே வைத்துக் கொள்கிறது. இதன் விளைவாக, நமது நிலக்கோள் அளவுக்கு மீறிச் சூடாகி விடக் கூடும். உலகின் வெப்பநிலை வெறும் மூன்று பாகை உயர்ந்தாலும் விளைவுகள் மிகவும் கடு-மையாக இருக்கும். துருவப் பகுதிப் பனிக்கட்டி கரைந்து போகும். சில மதிப்பீடுகளின் படி, மாகடல்களில் உள்ள நீரின் மட்டம் 50 முதல் 70 மாத்திரிகள் (மீட்டர்கள்) வரை உயருமாம். எல்லா ஐரோப்பியத் தலைநகர்களும் நீரில் மூழ்கிப் போய் விடும். மாசுகோ மட்டும் தரையின் மீது பெயரில்லாத ஒரு தீவைப் போல் நிற்கும். இவ்வுலகக் கோளம் ஒரு குறிப்பிட்ட அளவு எரியாற்றலைக் கதிரவனிடமிருந்து பெற்று அதைப் புறவெளியில் செலுத்துகிறது. இப்பணி சரியாகச் சமநிலை குறையாமல் நடைபெறுதல் வேண்டும் எனவே, இச்சமநிலையைப் பாதுகாப்பதற்கு, அது மாந்தனால் எவ்வகையிலும் கேடுறும் வகையில் நாம் எதுவும் செய்து விடக் கூடாது.

அதே சமயத்தில் கதிரவன் ஆற்றல் இந் நிலக் கோளின் வளி மண்டலத்தை ஏற்றத் தாழ்வான முறையில் வெப்பமூட்டுகிறது. நிலக்கோளில் காற்றுகள் வீசுகின்றன. அவற்றின்

ஆற்றல் மிகக் குறைவாகவே பயன்படுத்தப் படுகிறது. ஆனால் 21-ஆம் நூற்றாண்டில் மக்கள் இந்தச் சிக்கலுக்குத் தீர்வுகாண உடனே முயல்வர். கடலலைகளின் விசையாற்றலைப் பயன்படுத்துவதும் மிகவும் வாய்ப்பு வளமுள்ள ஒரு செய்தியாகும்.

அடுத்து 21-ஆம் நூற்றாண்டில் புற்றுநோய், எய்ட்சு போன்ற கொடிய நோய்களை மாந்தக்குலம் ஒழித்துக் கட்டுவதைப் பற்றி அவர் கீழ்வருமாறு விடை கூறுகிறார்.

எப்படியும் எய்ட்சு எதிர்ப்பு மருந்து ஒன்று கண்டு பிடிக்கப் பட்டு விடும் என்றபோதிலும், இந்நோய் மாந்தநெறி முறைப் படி ஒழித்துக் கட்டப் படவேண்டுமே யன்றி, மருந்தின் மூலமாக அன்று.

புற்று நோய் பற்றிய நம் கருத்துகளை நாம் மாற்றிக் கொள்வோம். புற்று நோய் என்றால் என்ன? அ'து ஒரு நோயே அன்று. எல்லா மக்களுக்குமே புற்றுநோய் உண்டு. ஆனால் ஒரு கட்டத்தில் மாந்த உயிரமைப்பின் தடுப்பு ஆற்றல் செயல்படாமல் போகிறது. அப்பொழுது பல்வேறு இயற்கைக்கு மாறான நிகழ்வுப் போக்குகள் அதில் தொடங்குகின்றன. புற்றுநோயைப் போக்குவதற்கான மருத்துவ முறையும் 21-ஆம் நூற்றாண்டில் கண்டு பிடிக்கப் படும்.

(மாந்த அறிவின் சில துறைகள் மாந்தரின் நன்மையை முன்னிட்டு வளர்க்கப்படக் கூடாது என்பது மாந்தக்குலம் 21-ஆம் நூற்றாண்டில் உணரும் என்று நம்புகிறேன்.)

இனி, உணவுச் சிக்கலைப் பொறுத்த அளவில் 21-ஆம் நூற்றாண்டில் உணவுப் பற்றாக்குறை என்ற சிக்கலே இல்லாது போய் விடும்.

அடுத்து மதங்களைப் பற்றியும் சொல்லியாக வேண்டும். மதத்தைக் காலப் பொருத்தமற்றதாக நான் கருதிய போதிலும், அதை நான் மதிக்கிறேன். மாந்தக் குலத்தினது வளர்ச்சியின் ஒரு குறிப்பிட்ட கட்டத்தில் அதனிடம் எதிர்பார்த்ததை மதம் நிறைவேற்றியது. பைபிளின் பத்துக் கட்டளைகளை எடுத்துக் கொண்டு பாருங்கள். மதம் போன்ற வலிமை வாய்ந்த ஓர் ஆற்றல் 21-ஆம் நூற்றாண்டிலும் இருந்து வரும். ஆனால் இன்னும் ஓர் ஆயிரம் ஆண்டுகளில் அது நினைவுகூரத்தான் பயன்படும். யாரும் நடைமுறையில் அதைக் கடைப்பிடிக்க மாட்டார்கள்.

21-ஆம் நூற்றாண்டில் மக்கள் புதிய சிந்தனைக்கு மாறிச் செல்வார்கள், இது தொழில் நுட்பத்தின் மீதும், மாந்த ஒழுக்கத்தின் மீதும் வலிவான தாக்கத்தை ஏற்படுத்தும். மதத்திற்குப் பகரமாக, பொதுவான மாந்த ஒழுக்கத் தரங்கள் நடைமுறைக்கு வரும் என்பது தெளிவு. அப்பொழுது போர்கள், இனம் மற்றும் நாடுகளுக்கிடையிலான சச்சரவுகள் முழுவதும் புறவயமாகி விடும். வருங்காலத்தை நான் நன்னம்பிக்கையுடன் காண்கிறேன்.

நன்றி. 'சோவியத்துப் பலகணி' 12—'88 0

'தென்மொழி'யில் வரும் பிற படைப்பாளர்களின் படைப்புகள் தனித்தமிழாக்கப் பெற்று வருவதே வழக்கம். அந்நெறி இன்றும் பின்பற்றப்பட்டு வருவது உண்மையெனினும் அதில் தளர்ச்சியும் கவனக்குறைவும் ஏற்பட்டுள்ளது. 'தமிழர் வாழ்வில் தாலி தேவையா? ''இன்றுள்ள தமிழர்கள்' முதலிய சிறந்த கட்டுரைகளில் பிறமொழிச் சொற்கள் மாற்றப்பெறுமல் விடப்பட்டுள்ளன. அடுத்த வெளியீடுகளில் விழிப்பாயிருக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தென்மொழியைத் தனித்தமிழ் இலக்கியப் பல்சுவைத் திங்களிதழாக முழுமையாக்குமாறு வேண்டுகிறேன். அனைத்துத் துறைகளிலும் தனித்தமிழை வளர்ப்பதற்கு இம் முயற்சி தேவை. எண்ணிப்பார்க்கவும். இதனைச் செய்யவும் முன்வரமாட்டீர்கள் என்பது தெரிந்தே இவற்றை எழுதினேன். இன்னும் அடிப்படைப் பணிகளில் செம்மையாக இறங்காத நிலையில் சிதைவும் சிறுமையும் நம்மியகத்தில் வளர்ந்துவருவது மிகவும் கவலையளிப்பதாக உள்ளது. சென்னைக்கு வருங்கால் சந்திப்பேன் ... ''வெளியிட வேண்டுமென்பதற்காக இம்மடல் எழுதப் பெறவில்லை.''

அன்புடன், க. தமிழமல்லன், புதுச்சேரி-9

O: *1318:* பேரன்புமிக்க பாவலரேறு அவர்களுக்கு, வணக்கம். தங்கள் புதுமனை, மொழிக்குப் பல ஆக்கங்களை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அதுவே எதிர்காலத்தில் தங்கள் தமிழ்மனை யாகுலும் மகிழ்ச்சி.

அன்புள்ள.

பர். ஆறு. அழகப்பன், அண்ணாமலை நகர்.

O: *1319:* பேரன்பின் தமிழ்நலஞ்சான்ற ஐயா! வணக்கம். நலமே! நலஞ்சிறக்க விழைகிறேன். 17-10-88 அன்று தென்மொழி —தமிழ்ச்சிட்டு கிடைக்கப்பெற்றுப் பெரிதும் மகிழ்ந்தேன். பல சொல்லவொணுத் துயரங்கட்கிடையிலும் இதழ் வெளிவருவது அரும்பெரும் செயலே. கட்டுரைகள் ஒவ்வொன்றும் அரிய படைப்பு. 'தமிழர் பண்பாட்டுத் தாக்கம்' 'தமிழர் வாழ்வில் தாலி தேவையா?' பிற ''அதியமான்— மடல்கள்'' — பாவலர்களின் பாடல்கள் அருமை! வீடுமாற்றமறிந்தேன். பிறபின்

—தங்களின் அன்பு நிறைந்த, — குழந்தை ஈகவரசன், திருச்சி-16

O: *1320:* அன்புடையீர், கனிச்சாறில் ''கண்ணின் நெஞ்சம்'' கண்டேன். தென்மொழியில் எரிமலையின் எதிரொலியை — நிறுத்தப்படுவதைக் கண்ணுற்றேன். கொதித்த எண்ணெயை என் கண்களில் கொட்டியதைப் போன்று உணர்வு கொண்டேன். யான் என் செய்ய! தமிழின் ஊழ்வினை போலும்!

அன்பு, அருள்மணி, வெங்காளூர்-46

O: *1321:* தென்மொழி ஆசிரியர் தமிழ் அய்யா, அவர்களுக்கு வணக்கம். நான் அரசினர் தொழிற் பயிற்சி நிலையத்தில் உதவிப் பயிற்சி அலுவலராக உளுந்தூர்பேட்டையில் பணிபுரிந்து வருகின்றேன்.

சென்ற 1988-ஆம் ஆண்டு சூன்- சூலை மாதங்களில் நடந்த ஆசிரியர் அரசு ஊழியர் வேலை நிறுத்தப் போராட்டத்தில் தோழர். சித்தலைச் சாத்தன் உ. செல்லூர், தென்மொழி அன்பரும் என்னுடன் கலந்து கொண்டார். பின்னர் அவர் தென்மொழி, தமிழ்ச்சிட்டு, தமிழ் நிலம், ஆகிய இதழ்களை என்னிடம் காண்பித்தார். உடனே அவை எல்லாவற்றையும் விலைக்கு வாங்கிக் கொண்டேன்.

தங்களின் தென்மொழி இதழை நான் 1960-இலிருந்து 1970 வரை பொது நூலகத்தில் படித்திருக்கிறேன். அப்பொழுதெல்லாம் தங்களின் ஆசிரிய உரையைப் படித்தால், உடம்பில் ஓடும்

Scanned with CamScanner

செங்குருதி சூடேறும். நாடி நரம்புகள் எல்லாம் துடிக்கும். முறுக்கேறும்; (எந்த வகை மருந்தும் உட் கொள்ளாமல்). தங்களின் எழுத்துக்கு அவ்வளவு ஆற்றல் இருப்பதைக் கண்டு நானும் ஒரு தென்மொழி வாசகரானேன். இருப்பினும், தாங்கள் பெரியாரைப் பற்றியும் விடுதலை நாளிதழைப்பற்றியும் அப்பொழுதெல்லாம் எதிர்க் கருத்துகளை எழுதி வந்தீர்கள். அவை எல்லாம் தேவையில்லை என்று அப்போது எண்ணினேன். ஆனால் 1975-1985 வரை சில திராவிடர் கழக மாநாடுகளில் ஆசிரியர் தளபதி வீரமணி அவர்களுடன் தங்களைச் சேர்த்துப் பார்த்த போது இரட்டிப்பு மகிழ்ச்சி பெற்றேன். திருச்சியில் நடந்த தி.க. மாநாட்டிற்குத் தாங்கள் பந்தலில் உள்ளே சென்றபோது பின்னாலேயே ஓடிவந்து 'அய்யா வணக்கம். தென்மொழி வளர்ச்சிக்குப் பத்து உருபா' என்று கொடுத்தேன். தாங்கள் தங்களுடன் வந்த ஒருவரிடம் கொடுக்கும்படி கூறி மகிழ்ச்சி தெரிவித்தீர்கள்.

பின்னர் தென்மொழி வராமல் இருந்தது. இப்பொழுது ''தென்மொழி'' ''தமிழ்ச்சிட்டு'' ஆகியவற்றைத் தோழர் சித்தலைச்சாத்தன் என்னைத்தேடி வந்து எனது அலுவலகத்தில் கொடுத்துச் செல்கிறார்கள். நானும் படிக்கிறேன். அவற்றை என்னிடம் பயிலும் பயிற்சியாளரிடமும் படிப்பதற்குக் கொடுக்கிறேன். பழைய இதழ்களாக இருந்தாலும் சிலர் காசு கொடுத்து வாங்கிச் செல்கிறார்கள். ஆனால் எனக்குத்தான் விற்பதற்கு மனம் வருவதில்லை.

தென்மொழியின் நிலை, அதைப்பற்றி ஒவ்வொரு தென்மொழி அன்பரும் எழுதுகின்ற கடிதம், எல்லாவற்றையும் தென்மொழியில் படித்தேன். தாங்கள் வெளியிடும் பொத்தகங்களில் எதையும் நிறுத்தக் கூடாது என்பது என்கருத்து. ஒரே அரசியல் இயக்கம் பல பிரிவுகளாகச் செயல்படுகின்றன; (எ.கா. இளைஞர் அணி, மகளிர் அணி, தொழிலாளர் அணி என்று.) அதே போன்று தாங்கள் தென்மொழி மூலம் மட்டுமே தமிழை, தமிழினப் பண்பாட்டை வளர்ப்பதைவிட, பல வழிகளில் பல பொத்தகங்களின் வழியாகச் செய்வதுதான் சிறந்தது என்று எண்ணுகிறேன்.

இதற்குப் பொருளியல் ஒரு சிக்கல். கிறித்துவ நண்பர்கள் தங்களின் வருமானத்தில் உருபா ஒன்றுக்கு ஒரு காசு மேனி எவ்வளவு உருபாக்களை அலுவலகத்தில் வாங்குகிறார்களோ, அதற்குத் தகுந்தாற்போன்று உருபாக்களை 'சர்ச்சு' களில் கொண்டு போய்க் கொடுக்கிறார்கள் என்று கேள்விப்பட்டேன். அதே போன்று ஏன் நாமும் தமிழுக்காக, தமிழினத்தைத் தூக்கி நிறுத்துவதற்காகச் செய்யக்கூடாது. ஓர் உருபாவுக்கு ஒரு காசு என்பது எவ்வளவு மிக மிக மிகக் குறைவு. இந்த உணர்வு ஒவ்வொரு தமிழனிடமும் அன்று; முதலில் ஒவ்வொரு தென்மொழி தமிழ்ச்சிட்டு அன்பரிடமும் கண்டிப்பாக ஏற்பட வேண்டும். இல்லையேல் ஒன்றும் உருப்படாது. எல்லாம் விழலுக்கு இறைத்த நீர்தான்.

எடுத்துக் காட்டாக, ஒருவரின் ஊதியம் உருபா 1000 என்றால் அவர் 1000 காசுகளை அ'தாவது உருபா 10.ஐத் தென்மொழி வளர்ச்சிக்கு மாதந்தோறும் அனுப்பலாம். இது முடியாதா? உணர்வு இருந்தால் முடியும். ஆனால் இப்பொழுது பெரும்பாலானவர்கள் உருபா 1000, 1500, 2000, 2500 போன்று

(தொடர்ச்சி 6ஆம் பக்கம்)